விலை ரூபா 2-00 16 பக்கங்கள்

# ஈழநாடு
வாரமலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஆவணி 10 ஜுல்கஃ 28 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (26—8—84) இதழ் 193

## இலங்கை தமிழர் பிரச்னை:
# இந்தியா கவலை!

(புதுடில்லி)

இந்திய லோகசபையில் நேற்று இலங்கைப் பிரச்னை விவாதிக்கப்பட்டது. இலங்கைத் தமிழர்களின் நிலைகுறித்து அங்கு அரசு எதிர்க்கட்சி ஆகிய இரு தரப்பிலும் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டது. இலங்கைப் பிரச்னை குறித்து இந்திய அரசு, கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அங்கத்தினர் வற்புறுத்தினர்.

## தமிழர்கள் ஏற்கும் அரசியல் தீர்வை உடன்
# அமுலாக்கவேண்டும்!
## ஜனாதிபதியிடம் யாழ். பிரஜைகள்குழு

[அலுவலக நிருபர் ஏ. வி. மாணிக்கம்]

தமிழ்பேசும் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியல் தீர்வை உருவாக்கி அதனை உடனடியாக அமுல்படுத்தும் படியும், அண்மைக்கால சம்பவங்களினால் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், உடைமைகளை இழந்தவர்களுச்கும் நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும், கோரும் நீண்ட மகஜர் ஒன்றை யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது.

கடந்த ஒருவருட காலமாக இடம்பெற்ற சம்பவங்களின் போது ஆயுதப்படையினரால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், நஷ்டங்கள்பற்றி விரிவாக குறிப்பிட்டுள்ள இம் மகஜரில் ஜனாதிபதி உடனடியாகத் தலையிட்டு தொடர்ந்தும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதியையும், பயத்தையும் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின்பிரதி அமைச்

[16-ம் பக்கம் பார்க்க]

## கரணவாயில் [redacted]
# 15வீடுகள் எரிந்தன

[யாழ்ப்பாணம்]

கரணவாய் தெற்கு உப்பளம் ரோட்டில் தீயிடப்பட்டு பாதிக்கப்பட்ட வீடுகளை யாழ். மாவட்டப் பதில் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு எம். பஞ்சலிங்கம் நேற்று பார்வையிட்டார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரையும், பதில் அரசாங்க அதிபருடன் சென்றிருந்தார்.

15 வீடுகள் எரிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் 18 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், பசு மாடொன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களினால் இறந்துகிடப்பதாகவும், வைக்கோல் பட்டடையும் தீயினால் எரிந்திருப்பதாகவும் பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டு பீதியடைந்திருந்த குடும்பங்களை அழைத்து அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்த அரசாங்க அதிபர், தற்காலிகமாகக் குடியிருப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொண்டதாகவும், அழிபாடுகள்பற்றி மகஜர் தயாரித்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கும்படியும் அவர்களைக் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடித்திருந்த பாதையில் 15 அங்குல நீளமும் 15 அங்குல அகலமும், 6—7அடி ஆழமும் ஏற்பட்டிருப்பதாகவும் பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றதாகவும் அரச அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டதாம். (மா)

## தங்காலைச் சிறையிலிருந்து [redacted]
# தப்பமுயன்ற தமிழ் இளைஞர்கள் சிக்கினர்!

[இ. கந்தசாமி]

தங்காலைச் சிறையிலிருந்து தப்பித்துச் செல்வதற்கு பதினைந்து தமிழ் இளைஞர்கள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்காலைச் சிறையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இந்த இளைஞர்கள் மேல் மாடியிலுள்ள இரு காவலர்களைக் கட்டி வைத்துவிட்டு, அவர்களுடைய உடைகளை அணிந்து கொண்டு முன்பின்னாக மாறும் நோக்கோடு கீழே வந்தபோது அகப்பட்டுக் கொண்டதாகவும் அறிக்கையொன்று கூறுகிறது

## லியனகே குறித்து விசாரணை!

[கொழும்பு]

தனிப்பட்ட பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு இஸ்ரேலுக்குச் சென்ற ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு டக்ளஸ் லியனகே அங்கு பத்ரிகைகளுக்கு தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

# தாய்மார் ஊர்வலத்தில் 'சிவா' பங்குகொள்ளவில்லை
## அன்னையர் முன்னணி காரியதரிசி கூறுகிறார்

[யாழ்ப்பாணம்]

'நேற்று முன்தினம் நாம் நடத்திய ஊர்வலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பங்குகொள்ளவில்லை. அரசியல்வாதிகளுக்கும் எங்களுக்கும் எதுவிதத் தொடர்புமில்லை' என்று அன்னையர் முன்னணிக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் கைதான தமது பிள்ளைகளை விடுதலை செய்யக் கோரி அன்னையர் முன்னணி

[16-ம் பக்கம் பார்க்க]

# இளைஞர்கைதுபற்றி இந்திரா கவலை
## ஜனாதிபதிக்கு கடிதம்

(புதுடில்லி)

வல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து 500 இளைஞர்கள் ஆயுதப்படையினரால் பிடித்துச்செல்லப்பட்டிருப்பது குறித்து தமது கவலையை வெளிப்படுத்தி இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பெரும்பாலும் மாணவர்கள் என்றும் அவர்கள் தென்பகுதியிலுள்ள

(16ம் பக்கம் பார்க்க)

## வல்வை நிகழ்ச்சிகள் வீடியோவில்

சென்னை, ஆக. 25

அண்மையில் வடபகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய 20 நிமிட வீடியோ படம் ஒன்று தமிழ்நாட்டில் காண்பிக்கப்பட்டுவருகிறது.

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1/1 மகாத்மா காந்தி ரோட்.
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

## ★ தமிழ் பிரிவினைவாதிகளுக்கு எதிராக
# இஸ்ரேல், பிரிட்டனிடமிருந்து இலங்கைக்குப்பெரும்உதவி

(ஜெருசலம்)

''பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இலங்கைக்கு இஸ்ரேலிடம்இருந்து பெருமளவு நிபுணத்துவ ஆலோசனைகளும், அனுபவமும் கிடைத்துவருகின்றன. இலங்கையில் பிரிட்டனின் அதிரடிப்படையைச் சேர்ந்த முன்னாள் நிபுணர் குழுவொன்றும் தமிழ் பிரிவினைவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவி வருகின்றது'' என்றும் இலங்கை ராஜாங்க அமைச்சின் செயலாளரான திரு. டக்ளஸ் லியனகே இஸ்ரேலில் தெரிவித்துள்ளார்.

'ஜெருசலம் போஸ்ட்' என்ற இஸ்ரேலியப்பத்திரி

(16ம் பக்கம் பார்க்க)

[1091]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இருநூறிற்கும் மேற்பட்ட வீடியோ கசட்டுகள் தரமான தமிழ் ஆங்கில சினிமாப்படங்கள் பிரதிசெய்யப்பட்டு நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. அத்துடன் ''வீடியோடெக்கும்'' [Model No: National 7500] விற்பனைக்கு உண்டு வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி. அ. ரட்ணசிங்கம் 51, சிவன்பண்ணை வீதி யாழ்ப்பாணம். 1439

மாசியப்பிட்டி மாரிஅம்மன் கோவிலடியில் 20 பரப்புக் காணியும் 10 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு தொடர்பு எஸ். கே. நடராசா பெருமாக்கடவை அளவெட்டி தெற்கு அளவெட்டி. 1432

மூன்றும் குறுக்குத் தெரு வேம்படிரோட் சந்தியில் 3 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளடங்கிய வீடு (4 படுக்கையறைகள், வரவேற்பறை, சாப்பாட்டு அறை, நவீன வசதிகொண்ட சமையல் அறை. கராஜ்) நியாயவிலைக்கு விற்பனைக்குண்டு. தொடர்பு; 18. சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 1297

நஷனல்கலர் ரி. வி. விற்பனைக்குண்டு 105, 1ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் மாலை 4க்கும்6 க்குமிடையில் பார்வையிடலாம். 1442

Alsation Silver Gery பெண் குட்டி ஒன்றும் பழகிய ஆண் மர அணில் ஒன்றும் விற்பனைக்குண்டு. P. மனோகரதாசன் அரசடி நவாலி தெற்கு மானிப்பாய். 1444

சுன்னாகம் பல.நோ.கூ. சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

### அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனியும், கழிவு மாவும், வெற்று பரல்களும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு ரூபா 250/-ம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-ம் மீளளிப்பு வைப்புப் பணமாக சங்கத்தில் செலுத்தி, வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பமுடிவு திகதி:-** 31-8-84 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி.

பொது முகாமையாளர்
சுன்னாகம் பல .நோகூ. சங்கம்
சுன்னாகம்.
1440 24-08-84

## விற்பனைக்கு

பொது நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும மத்திபமாகவும் மதிப்புள்ள சுற்றுடலில் வீதி முகப்புடன் சுண்டிக்குளியில் அமைந்துள்ள 1½ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல 1300 C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 1300

சண்டிலிப்பாய் மத்தியில் இருவீடுகள கட்டக் கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். புவனேந்திரன், சிங்கம் வளவு, கோட்ரோட், மல்லாகம். 1407

கச்சேரி கிழக்கு, புகையிரத வீதியில் (கண்டி வீதி, புகையிரதகடவைக்கும், புங்கங்குளம புகையிரத நிலையத்துக்கும் இடையில்) கிணறுவசதியுடன் கூடிய மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. தருலிங்கம், 11/6, சந்தன மாதா கோவில் ஒழுங்கை, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். 1403

## தேவை

25 ஏக்கருக்கு குறைவான நல்ல நிலையிலுள்ள தென்னம் தோட்டம் பளை, முல்லைத்தீவு பகுதியில் தேவை. விபரம் எழுதவும். சுரேந்திரா 78. சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1437

பேக்கறி உபகரணங்கள் முழுமையாகவோ பகுதியாகவோ தேவை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1434 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 1434

யாழ்ப்பாண இந்து உயர்குல பொறியியலாளருக்கு மணமகள்தேவை. மணமகள் தோற்றமுள்ளவராகவும், 30-35க்கு உட்பட்டவயதுள்ள பட்டதாரியாக அல்லது அதற்குச் சமனாக இருத்தல் நல்லது. மணமகனுக்கு செவ்வாய் தோசம். விபரமும் குறிப்பும் கீழ் தந்த விலாசத்திற்கு அனுப்பவும். விளம்பர இல. 1285 C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 1285

## தவறிவிட்டது

பரந்தனுக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையே 'CD 185' ரகத்தைச்சேர்ந்த ஹொண்டா மோட்டார் சைக்கிளின் சைட்கவரும், உபகரணங்களை வைக்கும் பையும் தவறிவிழுந்துவிட்டன. இவற்றை கண்டெடுத்து வழங்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். விபரங்களுக்கு: பி. ஜெகதீஸ்வரன், 81, றக்கா ரோட், யாழ்ப்பாணம். 1424

## 4 வயதுக் குழந்தையை உதைத்தார் தந்தை!

(பண்டத்தரிப்பு)

மதுபோதையில் வீட்டுக்கு வந்த தந்தை ஒருவர் தமது நான்கு வயது மகளை காலினால் உதைத்து தாக்கினாராம். இதனால் அப்பிள்ளை கைமுறிந்த நிலையில் யாழ். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். வவனியாவைச் சேர்ந்த துரைராசா சுசிலா என்னும் பெண் பிள்ளையே இவ்வாறு அனுமதிக்கப்பட்டவராவர். ஒன்பதாம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு அவசர சிகிச்சையளிக்கப்பட்டது. ஆஸ்பத்திரி பொலிசார் இதுபற்றி விசாரணை நடாத்தி வருகின்றனர்.

## தேவை

எல்லா விதமான பாவித்த கார், வான், லொறி, வாகனங்களும் மோட்டார் சையிக்கிள்களும் வாங்குவோம். C.S. முருகையாபிள்ளை 72/2 றெயில்வே கிழக்கு ஒழுங்கை கந்தர்மடம் யாழ்ப்பாணம். 1284

## யாழ்ப்பாண அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 3 - 9 - 84-ல் ஆரம்பமாகின்றன.

84/85-ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 65 மாணவர்களுக்கு மேலாக மருத்துவம், பல்லறுவை மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம், எந்திரவியல், பௌதிக விஞ்ஞானம், சட்டம் ஆகிய பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்.

அதிபர்.

தொலைபேசி எண். 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1283

## தீராத வினைதீர்க்கும் தீரன்

பேரா தரிக்கும் அன்பர்களின்
அகமதிலே அமர்ந்திடுவான்
நேரா கவந்து நிதம் நின்னருள்
வேண்டி நிற்பார்
தீரா வினைதீர்க்கும் தீரன்
திருவுலா வருவதைப்
பாரா தகண்ணும் ஒரு கண்ணோ
பதமலர் பரவிடாமல்

இராசையா ஸ்ரீதரன்

## 31ம் நாள் நினைவஞ்சலி

செல்வி] அமிர்தம்மா யோசேப்பு

(இளைப்பாறிய ஆசிரியை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

தோற்றம்: 27-6-1903 மறைவு: 26-7-1984

கடற்கரைத்தெரு,
பருத்தித்துறை.

பிரிவால் துயருறும்
பேரப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்
1438

## விசேஷ மலிவு விற்பனை

எமது ஸ்தாபனத்தில் கீழ்க்காணும் பொருட்கள் 25-8-84 தொடக்கம் 10-9-84வரை 35% விசேஷ கழிவுடன் ரொக்கத்திற்கு விற்பனை செய்யப்படும்,

1. அஸ்ரெக் பி. வி. சி, பைப்புகள்
2. அஸ்ரெக் கொண்டியூட் பைப்புகள்
3. அஸ்ரெக் பி. வி. சி. பொருத்திகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் இக்கால எல்லைக்குள் பெற்றுக்கொள்ளலாம் காலஎல்லை நீடிக்கப்படமாட்டாது.

மூர்த்தி அன் கொம்பனி,

3ம் கட்டை, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். 1433

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

கொழும்பு ஸ்ரூடியோ




குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானாலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை யாழ். நகரிலேயே பதிவு செய்து கொள்வதற்கும், பிரான்ஸ், இத்தாலி, செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளையும் மிகக் குறைந்த கட்டணத்தில் செய்து கொள்வதற்கும் உடன் நாடுங்கள்.

''குறெஸ் ட்ரவல் சேர்விசஸ்''

Cross International Telecommunication Services

CTS

உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், ரெலெக்ஸ் (TELEX) சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Tele Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S.) C E

குறெஸ்ரெக்னிக்கல்சேவிஸ்

சகலவிதமான மின்சாரப் பொருட்கள், கைக்கடிகாரங்கள், சமையலறை உபகரணங்கள் உட்பட ஆடம்பரப்பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

STAGE No: II. MODEL MARKET. No, 5: 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Telephone: No: 22040, 22065. TELEX No. 22207 (C. T. S) C E

வார மலர்
ஈழநாடு லங்கா
EELANADU VARAMALAR

# 'ஊனமுற்றவர்களின் சரணாலயம்' அன்னை திரேசா

[நாளை ஆகஸ்ட் 27-ம் திகதி அன்னை திரேசாவின் 75-வதுபிறந்ததினம் அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.]

★ பி. கே. அலுவலியா

"தொழுநோயாளரைத் தொடுங்கள்; கருணையோடு தொடுங்கள்" அன்னை திரேசாவின் தாரகமந்திரமிது. ஏழைகளதும், கைவிடுபட்டவர்களதும் கருணைத் தெய்வமாக அவரை இந்த மந்திரம்தான் மாற்றி அமைத்துள்ளது. சமூகத்தில் இதுவரை இடமே இல்லையென்று கருதப்பட்டவர்களின் அன்புக்குரியவராக மாறியுள்ள இவர். அதற்காக மனிதசக்திக்கும் அதிகமாகவே அப்பழுக்கற்றபணிபுரிந்துள்ளார். அமரர் ஜவஹர்லால் நேரு அன்னை திரேசாவின் பணிகளால் கவரப்பட்டு ஊனமுற்றவர்களின் சரணாலயம் அவர்" என்றுவர்ணித்தார்.

## அன்னையின் முன்னைய பெயர்

அன்னை திரேசாவின் முன்னைய பெயர், ஏக்னஸ் கொங்ஷா பெஜாஷியு (Agnes Gonxha Bejaxhiu) என்பதாகும், யூகோஸ்லாவியாவில் அல்பேனிய பெற்றோரின் புதல்வியாக 1910, ஆகஸ்ட் மாதம் 27-ம் திகதி அவதரித்தார். 12- வயதிலேயே துறவியாகவேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது அவருக்கு, 18 வயதில் லொரெட்டோ சகோதரிகள் ஸ்தாபனத்தின் ஐரிஷ்பீடத்தில் சேர்ந்தார்.

## இந்தியா வருகை

1928 நவம்பர் 28ம் திகதி இந்தியாவுக்கு வந்தார். 1929ல் கல்கத்தாவில் உள்ள சென் மேரிஸ் உயர்பாடசாலையில் பூகோள ஆசிரியராகச்சேர்ந்தார் விரைவிலேயே அக்கல்லூரியின் அதிபரானார். 1931ம் ஆண்டில் திரேசா என்ற பெயரை புனைந்துகொண்டார்.

1946 செப்டம்பர் 10- திகதியிலிருந்து அன்னைதிரேசாவின் வாழ்வில் ஒருதிருப்பம் ஏற்பட ஆரம்பித்தது. அன்றைய தினம் மெல்லிய குரல் ஒன்றை தனக்குள்ளேயே கேட்டார். மனித இனத்துக்குப் பணிபுரிவதற்கான புதியசோதனைகளை நடத்தும்படி அக்குரல் பணித்தது. அதுபற்றி அவர் கூறியதாவது: 1946, செப்டம்பர் 10ம் திகதி டார்ஜீலிங்கிற்கு நான்குபோகும் போது, ஒரு அழைப்புக் கேட்டது, எல்லாவற்றையும் நான் கைவிடவேண்டும், வறுமையிலும் வறுமையில் வாழ்பவர்களுக்காகப் பணிபுரிவதில் என்னை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்று அக்குரல்கேட்டுக்கொண்டது"

## நசுக்கமுடியாத உட்குரல்

மனதுக்குள்ளிருந்து வரும் குரலை அமுக்கிவிடவோ நசுக்கிவிடவோ முடியாது. அக்குரலுக்கு எதிராக வாதாடி அன்னை தோற்றுவிட்டார் "அதுவே இறைவனின் விருப்பம், கன்னியர் மடத்தைவிட்டு வெளியேறி பரந்தவெளிக்களத்தில் பணிபுரியப்புறப்படு இன்னும் முக்கியமான பணிகளை மேற்கொள்ள உன்னை தெரிந்தெடுத்துள்ளார். நீ அவரின் கருவி, கடவுளிடமும், வாழ்க்கையிலும், மனித சமுதாயத்திலும் நம்பிக்கை இழந்துவிட்டவர்களுக்கு உன் மூலமாக அமைதியும் ஆறுதலும் அளிக்க விரும்புகிறார் அவர் அவர்களுக்கு நம்பிக்கையளித்து துன்பத்தைக் குறைப்பாய். தன்னலமற்ற சேவை புரிந்து இறைவனிடம் அவர்களை நம்பிக்கைகொள்ள செய்வாய்" என்று அக்குரல் வலியுறுத்திக் கொண்டிருந்தது.

## மிகப்பெரிய தியாகம்

இந்தச்சவாலை ஏற்றுக் கொள்ள அன்னை திரேசா முடிவு செய்தார். கன்னியர் மடத்தை விட்டு வெளியேற பாப்பரசரிடம் அனுமதி கோரினார். 1948ல் அவருக்கு அனுமதி கிடைத்தது. அனுமதி கிடைத்த உடனேயே கையில் ஐந்துரூபாய்பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு கன்னியர் மடத்தைவிட்டு வெளியேறிய அன்னை, தெருக்கள் வழியாக நடந்து கல்கத்தாவிலுள்ள சேரிப்பகுதிக்குச் சென்றார்.



லொரெட்டோவிலுள்ள கன்னியர் மடத்தைவிட்டு வெளியேறியதுபற்றி அன்னை பின்னர் ஒருமுறை நினைவு கூர்ந்தபோது பின்வருமாறு கூறினார். 'அதுதான் எனது மிகப்பெரிய தியாகம். மிகவும் கஷ்டத்துடன் நான் செய்து முடித்த ஒரு காரியம் இது சமயவாழ்வில்புகுவதற்கு எனது குடும்பத்தையும் நாட்டையும் விட்டு வெளியேறியதைவிட மிகக் கஷ்டமான காரியமாக இருந்தது இது"

## குழந்தைகளுக்கு சேவை

கல்கத்தா சேரியில் காணப்பட்ட புழுதியில் உழன்ற சில குழந்தைகளை ஒன்று சேர்த்தார். அன்போடும் ஆதரவோடும் ஒரு மரத்தடியில் வைத்துக் கழுவினார் - எழுத்துச் சொல்லிக்கொடுத்தார்.

பட்னாவில் உள்ள சுகாதார கன்னியாஸ்திரிகள் மடத்தில் சிறிதுகாலம் பயிற்சி பெற்றார். கல்கத்தாவில் கிறீக் வீதியில் தமது முதலாவது இல்லத்தையும், பாடசாலையையும் ஆரம்பித்தார். இது நடந்தது 1948ல் இந்திய பிரஜாவுரிமையும் பெற்றுக்கொண்டார்.

இந்தியர்களோடு தம்மை ஒன்றிணைத்துக் கொள்வதற்காக தம் உடையையும் பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொண்டார். நீலக்கரை போட்ட வெள்ளைச்சாறியை உடுக்க ஆரம்பித்தார். கல்கத்தாவிலுள்ள ஏழைகளுடன் வங்காளத்தில் அவர் கதைக்கலானார்.

தமது சொந்தப் பொறுப்பில் சபை ஒன்றை அமைத்துக் கொள்வதற்கான பாப்பரசரின் அனுமதி அன்னை திரேசாவுக்கு 1950ம் ஆண்டு கிடைத்தது. அன்னைத்திரேசாவின் சபையில் சேர்பவர்கள் ஏழ்மை, தூய்மை, பணிவு ஆகியவற்றுடன் ஏழைகளுக்காகப்பணி புரிவேன் என்ற உறுதி மொழியை எடுத்துக் கொள்ளவேண்டும்.

',ஏழைகளுக்குப் பணிபுரியவும், ஏழைகளை அறிந்துகொள்ளவும் நாம் முதலில் ஏழ்மையாய் இருக்கவேண்டும். தூய்மையாய் இருப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்வது எமது இதயத்தை முழுமையாக ஏசுவிடம் அர்ப்பணிக்கிறோம் என்பதற்காகவே. பணிவாக இருப்பதினாலேயே ஏனைய உறுதிமொழிகளை எடுத்துக் கொள்கின்றோம்" என்று அன்னை திரேசா விளக்கம் அளிக்கின்றார்.

(13-ம் பக்கம் பார்க்க)

---

# இருவேறு உலகம்

தமது கார்சிணுங்கத்தொடங்கினதும் கராச்சே தஞ்சம் என்று நினைக்கின்றனர் விஞ்ஞானம் படித்து பயிற்சி பெற்ற பட்டதாரிகள்.

கலைப்பட்டதாரிக்கு கார்உண்டானால் அவ்வாறு நினைப்பதில் என்னவியப்பு?

'ஐயா வேறொருபிழையுமில்லை. சொக்கச்சோபர் மாற்றவேண்டும்' என்கிறார் காரைப்பார்த்தபடியாத மெக்கானிக் மேதை

'சொக்கச்சோபர்' அப்படியா? என்று ஆறுதலடைந்த 'விஞ்ஞான' Shock absorber பற்றி நன்கறிந்தவர். ஏட்டுச் சுரைக்காய் என்னசெய்யும்.?

இன்று யாழ்ப்பாணத்தில் மோட்டர் வாகனம் மட்டுமல்ல. மனிதவாகனத்துக்குமே சொக்கச்சோபர் நல்ல நிலையில் இருக்கவேண்டும்.

அறிவு வெறுமையாக இருத்தல் வீண் அறிவு-அனுஷ்டானம் இரண்டும் தொடர்பான பயிற்சியே வாழ்க்கைக்கு வளம் அளிக்கும்.

விஞ்ஞானம் படிக்கிறவர்கள் இலக்கியமோ அரசியலோ தெரியாதிருக்கின்றனர். ஆங்கிலப் புலவர் 'மில்ரன்' கடையில் விலைப்படும் ஒரு சருவியென நினைக்கின்றனர்.

கலைப்பயிற்சி பெற்றவர்கள் வீட்டில் 'மோட்டர்' வேலைநிறுத்தம் தொடங்க மின்னியல் மெக்கானிக்கிடம் ஓட்டம்பிடிக்கின்றனர்

ஒரேபத்திரிகைகள், ஒரே வானொலி வாசித்தும், கேட்டும், இரு உலகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த யுக வாழ்க்கைக்கு இன்றியமையாதது-அனுஷ்டானம்-அறிவு; அனுஷ்டானம் அறிவு என்றறிக.

---

# ஹீ ஹூ

ஆசிரியர்: ஏதாவது வங்கி திறந்து வேலைநடககிறதா?
நண்பர்: ஆம்
ஆசிரியர், எந்த வங்கி?
நண்பர்; இரத்தவங்கி.

●

ஒருவர்: தம்பி இதுதானே பென்சன் கியூ?
மாணவர்: இல்லை அப்பு இது, பென்சன் எடுக்க வந்தவர்களின் மலசல கூட கியூ.

●

ஒருவர்: அண்ணே, பென்சன் எடுத்துவிட்டீர்களா?
மற்றவர்; ஓமோம், பத்துவருடத்திற்கு முன்பே எடுத்து விட்டேன.
ஒருவர்: அதில்லை, பென்சன் காசு எடுத்து விட்டீர்களா என்று கேட்டேன்.

●

ஒருவர்: உங்க அப்பா நேற்று 'பென்சன்' எடுத்து விட்டாரா?
கண்ணன்; அப்பா 'பென்சன்' எடுக்கவில்லை 4 மணி நேரம் வெய்யிலுக்குள் நின்று வாந்தி தான எடுத்தார்.

●

ஒருவர்; அதிகாலை எங்கே நல்லூரிலே உதயகாலப் பூசை பார்க்கவா போகிறீர்?
மற்றவர்; இல்லையண்ணே 'பென்சன்' எடுக்க ஸ்ரேடியத்துக்கு போகிறேன்.

●

தபால் அதிபர்; உமக்குத்தானே பென்சன் மற்ற இரண்டு பேரும் யார்?
பென்சன்காரர்: நான் சாமான் வங்கும் கடைக்காரர் ஒருவர் மற்றவர் பால்காரர்

●

தபால் அதிபர்: இந்தாங்க உங்க பென்சன் காசு.
பென்சன்காரர் என்னுடன் மனைவியும் வந்திருக்கிறா. அவரிடம் கொடுங்கோ.

●

நண்பர் சம்பளம் எடுத்துவிட்டீர்களா?
ஆசிரியர்: போன 10ம் தேதி எடுத்துவிட்டேனே.
நண்பர்: சம்பளப் பட்டியல் இன்னும் வைவில்லையே எப்படி எடுத்தீர்கள்?
ஆசிரியர் 'ரியூசன வகுப்பு' சம்பளத்தை சொன்னேன்

●

ஒருவர்; சம்பள கொடுக்கிறார்களே நீங்கள் எடுக்கவில்லையா?
ஆசிரியர்; நல்லூர் திருவிழா முடிய எடுப்பம்?
ஒருவர்: ஏன் அப்படி?
ஆசிரியர்: என் மனைவி திருவிழாவுக்கு சாறியொன்று வாங்கித்தரும்படி கேட்டுக் கொண்டிருக்கிறா.

கா. யோ. கிரிதரன்

---

●

'நீலகண்டன்' என்று இறைவனை அழைப்பது அவன் கழுத்திலிருக்கும் விஷத்துக்காக! 'நீல விழி' என்று பெண்களை அழைப்பது அவர்கள் கண்களிலிருக்கும் விஷத்துக்காக!

— கண்ணதாசன்

## நினைவில் நிறைந்த அரசியலார் சிலர்-4

# இரும்பு மனிதர்

# டாக்டர் நாகநாதன்

"இவ்வளவு காலமும் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்து வந்திருக்கிறேன். இப்பொழுது தமிழுக்குநோய்வந்திருப்பதால் அதற்கு வைத்தியம் செய்ய முன்வந்திருக்கிறேன்".

இரும்புமனிதன் என்று பலராலும் அழைக்கப்பட்ட டாக்டர் இ மு. வி. நாகநாதன் அரசியல் பிரவேசம் செய்த காலத்தில் மேற்சொன்னவாறு மேடைகளில் விளக்கம் சொல்லிவந்தார்.

தமிழ்க்காங்கிரசிலிருந்து திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் திரு. கு வன்னியசிங்கம் ஆகியோர் பிரிந்து இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியை ஆரம்பித்தபொழுது டாக்டர் நாகநாதனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். தமிழரசுக்கட்சியின் முதல் இணைச் செயலாளரில் ஒருவராக டாக்டர் நாகநாதனே தெரிவுசெய்யப்பட்டார் மற்றவர் டாக்டர் வி. பரமநாதன்.

அக்காலத்தில் டாக்டர் நாகநாதனுக்கு தமிழ் வாயில் வருவது பெரும் கஷ்டம் முதலில் சில வார்த்தைகளைப் பெரும் கஷ்டப்பட்டுப் பேசுவார் இப்பொழுதுதான் தமிழ் படிக்கிறேன் இன்னும் சிலகாலத்தில் நல்ல தமிழ்பேசுவேன் என்று மேடைகளிலேயே சொல்லுவார். "நான் ஆங்கிலத்தில் பேசப்போகிறேன். தம்பி அமிர்தலிங்கம் அதைத் தமிழ்ப்படுத்துவான்" என்று சொல்லி மன்னிப்பும்கேட்டுக் கொண்டு ஆங்கிலத்தில் வெளுத்துவாங்குவார்.

முதலில் தமிழில் பேசும் சில வார்த்தைகளும்கூட வாயில் வருவதற்குக் கஷ்டம் ஏற்படும்போது தனது உச்சந்தலையில் தமது கையினால் அடித்துக்கொண்டு காலால் மேடையிலும் உதைத்துக்கொள்வார். யாழ். நகர் கன்னாதிட்டி ஒழுங்கையில் வைரவர் கோயில் வளவில் 1949-ஆம் ஆண்டில் தமிழரசுக்கட்சியின் ஆரம்ப காலப் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அவசரமாக இது ஒழுங்கு செய்யப்பட்டதாலும் அக்காலத்தில் மேடை அமைப்புக்கான வசதிகள் குறைவாக இருந்ததாலும் கட்சியில் நிதிப்பற்றுக்குறை காரணமாகவும் பலகைகளையும் வாங்குகளையும் வைத்து மேடை அமைக்கப்பட்டிருந்தது.

டாக்டர் நாகநாதனுக்குத் தமிழ் வாயில் நுழையக்கஷ்டப்பட்டபோது உச்சந்தலையில் ஒருகையால்அடித்துக்கொண்டு காலினால் மேடையில் உதைத்தார். மேடை ஆட்டம் கண்டுசரிந்துவிட்டது மேடையிலிருந்தவர்கள் அவசர அவசரமாகக்கீழே இறங்கினர். அந்தவளவில் வசித்துவந்தவர்களின் வீடுகளிலுள்ள உரல்களை கூட்டஏற்பாட்டாளர்கள் கொண்டுவந்து மேடைக்கு முண்டுகொடுத்துச் சமாளித்துக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

### உச்சரிப்பில் தவறியதும் தலையில் அடித்தார்

ஒரு சமயம் டாக்டர் நாகநாதன் 'ஈழநாடு அலுவலகத்துக்கு வந்து அன்று வெளிவந்த ஒரு செய்தி சம்பந்தமாக ஓர் அறிக்கைவெளியிடவேண்டும் என்று நிர்வாக ஆசிரியர் திரு. கி. பி. ஹரனிடம் விளக்கம் சொன்னார். உங்கள் அறிக்கையை பேஷா

**எஸ். எம். ஜி.**

கப் போடுவோம், கொண்டு வந்திருக்கிறீர்களா? என்று கேட்டார் இல்லை நான் சொல்லுகிறேன் யாரையாவது எழுதச்சொல்லுங்கள் என்றார் டாக்டர் நாகநாதன் அகப்பட்டேன் நான் வீரகேசரியில் பணியாற்றிய காலத்திலேயே டாக்டருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டிருந்தது அவர் அறிக்கையைச் சொல்லத் தொடங்கினார்; ஆங்கிலத்தில்தான். ஒருபந்தியைச் சொல்லிவிட்டுத் திருப்பி வாசிக்கச் சொல்லுவார். இப்படித்திருப்பி வாசிக்கும்போது "இர்றெஸ்போன்சிபிள்" (Irresponsible) என்ற வார்த்தையில் 'இர்' என்பதை அழுத்திச் சொல்லவில்லை. டாக்டர் இரண்டுதடவை அதைத்திருப்பிச்சொன்னார். நான் மூன்றுவது தடவையும் அதை அழுத்திச்சொல்லத் தவறியதால் உடனே எழுந்து என் உச்சந்தலையில் அடித்துவிட்டார். நான் சிரித்தேன்! ஆனால் அது ஆசிரியர் ஹரனுக்குப் பிடிக்கவில்லை! இப்படி இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆசிரியர் ஹரனின் உச்சந்தலைக்கே டாக்டர் கையை உயர்த்திவிட்டார் ஆசிரியருக்குக் கடும்கோபம் வந்துவிட்டது. "உங்களைப் போன்ற தலைவர்களிடமிருந்து ஆண்டவன்தான் மக்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று உரத்தகுரலில் சொல்லிவிட்டார்.

இதேபோல் யாழ்ப்பாணத்துக்கு முதல்தடவையாக விஜயம் செய்த இந்தியத் தூதுவர் திரு. பி கே. கப்பூர் ஆற்றிய உரையைப்பற்றி டாக்டர் நாகநாதன் மறுப்புத் தெரிவிக்க வந்தார். அச்சமயம் அமரர் டாக்டர் கே. வி. சண்முகரத்தினத்துக்கும் டாக்டர் நாகநாதனுக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

டாக்டர் நாகநாதனின் உள்ளம் குழந்தைத்தனமானது. இதைப் பின்னர்தான் ஆசிரியர் ஹரனும், டாக்டர் சண்முகரத்தினமும் உணர்ந்துகொண்டனர்

1956-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம்திகதி பாராளுமன்றத்தின் முன்னே காலிமுகத்திடலில் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் சத்தியாக்கிரகம் செய்தனர். சிங்களம் மட்டும் மசோதாவை அன்றைய பிரதமர் திரு. எஸ் டபிள்யூ. ஆர். டி, பண்டாரநாயகா கொண்டுவந்தபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே இச்சத்தியாக்கிரகம் ஒழுங்குசெய்யப்பட்டது. குண்டர்கள் பலர் பாதுகாப்புப்பிரிவினர் பார்த்துக்கொண்டிருக்கையில் சத்தியாக்கிரகிகளைத் தாக்கினர். திரு அமிர்தலிங்கம் மண்டையில் பெரும் காயமேற்பட்டது அந்தக்காயத்துடன் அவர் பாராளுமன்றத்துக்குச்சென்று பின்னர் உரையாற்றினர்.

அன்றைய சத்தியாக்கிரக சமயத்தில் டாக்டர் நாகநாதன் குண்டர்களின் மத்தியில் சிக்கிக் கொண்டார்

அன்றிரவு டாக்டர் நாகநாதனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நடந்த விஷயத்தைக் கேட்டேன். "தம்பி அகிம்சையும் சத்தியாக்கிரகமும்தான் எங்கள் கொள்கை. இதற்காக இன்று உண்ணாவிரதமும் இருந்தோம். ஆனால் நான் காலிமுகத்திடலில் வந்து கொண்டிருந்தபோது சில குண்டர்கள் என்னைத் தடுத்துத் தாக்கினார்கள். நான் அகிம்சையைத்தான் கடைப்பிடிக்க முயன்றேன். ஆனால் என்னைக் கீழே விழுத்திய குண்டர்கள் என் மர்மஸ்தானத்தில் பாய்ந்து மிதித்து என்னையே முடிவு கட்ட எத்தனித்தார்கள். இதற்குப் பிறகும் அகிம்சை சரிவராது என்று நினைத்துக் கொடுக்கத் தொடங்கினேன். பலர் சிதறி ஓடினார்கள். கடைசியில் எனது வேட்டியும் உரிந்து விட்டநிலையில் கால்பேஸ் ஹோட்டலுக்குள் நுழைந்தேன். மேசை விரிப்புத் துணியை எடுத்து உடுத்துக்கொண்டு உள்ளே சென்றேன். இதே சமயம் அந்தக் ஹோட்டலின் மேல் மாடியிலிருந்து இச்சம்பவத்தையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த வெள்ளையர் சிலர் நீங்கள் செய்ததுதான் சரி என்று என்னைப் பாராட்டினார்கள்' **என்று பொரிந்து தள்ளிவிட்டு** டாக்டர் தமது போனைக் கீழே வைத்துவிட்டார்.

டாக்டர் நாகநாதனைப்பற்றி ஒரு பெரிய நூலே எழுதலாம் ஆனாலும் அடுத்தவாரத்துடன் இக்கட்டுரையைச் சுருக்கமாக முடிக்கின்றேன் சென்ற வாரம் தான் அவரது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்திக் கொள்வது நல்லதல்லவா?

[மிகுதி அடுத்த வாரம்]

---

● நிலைமேலேயும் நினைவு கீழேயும் இருந்தால் நிலை உயர்ந்துகொண்டேபோகிறது. நிலை கீழேயும் நினைவு மேலேயும் இருந்தால், நிலைஇருந்த இடத்திலேயே இருக்கிறது. நினைவு மட்டும் முன்னேறுகிறது. — கண்ணதாசன்

---

● 27 பிரசவங்களில் ஒரு மொஸ்கோ பெண் 69 குழந்தைகளைப் பெற்ருள் இந்தப் பிரசவங்களில் நாலு பிரசவங்களில் ஒவ்வொரு பிரசவத்திலும் நான்கு நான்காகப் பெற்ருள். 7 பிரசவங்களில் ஒவ்வொரு பிரசவத்திலும் மூன்று மூன்ருகப் பெற்ருள். 16 பிரசவங்களில் இரட்டைக் குழந்தைகளைப்பெற்ருள். இந்த மக்களைப் பெற்ற மகராசி 1872ல் தனது 56ஆவது வயதில் இறந்தாள்.

—ராணி


உ
சிவமயம்



நல்லைநகர்க் கந்தர்

திரு ஊஞ்சல்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இவ்வருஷ மகோற்சவத்தை முன்னிட்டு 'நல்லைநகர்க் கந்தர் திருஊஞ்சற்' பாமாலையை, தேவஸ்தான அறங்காவலர் அனுமதிபெற்று மறுபதிப்புச்செய்து, கந்தப்பெருமானின் அடியார்களுக்கு இலவசமாக வழங்கத் திருவருள் பாலித்துள்ளது. இங்கு குறிப்பிடும் இடங்களில் அடியார்கள் இந்நூலைக் கேட்டுப்பெற்றுக்கொள்ளவும்.

1. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
2. பூபாலசிங்கம் புத்தகசாலை
   மத்திய பஸ் நிலையம், யாழ்நகர்.
3. சோதிடவிலாச புத்தகசாலை
   46, பெரியகடை, யாழ்நகர்.
4. குளோபல் பணியகம்
   கூட்டுறவுப் பணிமனை, யாழ்நகர்.

குளோபல்

கொம்யூனிக்கேஷன்ஸ் லிமிட்டெட்
ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை வல்லுநர்கள்
யாழ்ப்பாணம்.
(யாழ். தபாற்கந்தோருக்கு அருகாமையில்)
ரெலிபோன்: 23015, 23249, 23312.



நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!
இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்
நிலையான வைப்பிற்கு யாழ். நகரில் அதிஉயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்

SHABRA

துரிதமாகவும், துலக்கமாகவும் பிரதிகள் செய்யவும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் நாடவேண்டிய இடம் "ஷப்ரு"

61, நியூ புலர்ஸ் வீதி
கொழும்பு - 4-
தொ. பேசி. இல: 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073

## ஏழு பெண் எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும்

## தொடர் நவீனம்

# சிதைவுகளில் ஓர் உதிப்பு!



**கோகிலா மகேந்திரன்**

இந்த விடு முறையில் உழைக்கும் பணத்தில் ஒரு மாதிரிக் கமலாவின் கழுத்துக்கும் அந்த மெல்லிய ஒற்றைப் பட்டுச் சங்கிலிக்கும் உள்ள உறவைப் புதுப்பிக்கலாம் என்று நினைத்திருந்தாள் மகேஸ்வரி. அது கடந்த இரண்டு வருடகாலமாக ஒரு ஐந்நூறு ரூபா கடனுக்காக இராசேந்திர உபாத்தியாயர் வீட்டுப்பெட்டியில் தூங்குகிறது. அதைச் சிறை மீட்பதற்கான திட்டத்தின் முதற் கட்டமே உமைபாலனின் தோட்டத்தில் தோல்வியாகி விட்டது!

இன்று காலையில் அவள் தாமதிக்காமல் தயாராகி விட்டாள். இன்று வைரவப் பிள்ளையரின் தோட்டத்தில் நடுகையாம்! அவள் நேற்றுப் போல் ஆகிவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையில் முதலே சின்னம்மாக்காவிடம் கேட்டு அறிந்து கொண்டாள்.

'வைரவப் பிள்ளையர் கொஞ்சம் காசிலை கவனந்தான். மற்றும்படி நல்ல மனுசன்' அவள் தனக்குள் நிறுத்துப்பார்த்துக் கொண்டாள்.

கொல்லன் பட்டடையாக அமளிப்படும் அந்த 'ரோட்'டையும் காதைத் துளைத்து எரிச்சலைக் கிளறுகிற அந்த அரிசி மில்லையும் கடந்து 'சின்னம்மாக்கா செற்' வைரவப் பிள்ளையரின் தோட்டத்தில் இறங்கி விட்டது.

''ஓ... ரீச்சர் வந்திருக்கிறு... இண்டைக்கு வேலைக்கு!'' வைரவப்பிள்ளையர் பாக்கு ஊறிய காவிப்பற்கள் முழுவதும் வெளியே தெரியச் சிரித்தார்.

''பள்ளிக்கூடத்திலை தான் ரீச்சர். இஞ்சை மற்றாக்களைப் போலத்தான் நானும். எனக்குச் சம்பளம் ஒரு வேளைகூடத் தரவேணுமோ எண்டு பயப்பிடாதேங்கோ!''

மகேஸ்வரியும் சிரித்துக் கொண்டே கூறிவிட்டு மும்முரமாக வேலையில் இறங்கி விட்டாள்.

வேகம்...! எல்லாரும் கடும் வேகம்...! கழுதை வாலில் தகரம் கட்டிய வேகந்தான்...!

பகல் பதினொரு மணிக்கெல்லாம் ''அரைவாசித்தறை'' நடுகையே முடிந்து விட்டது. வைரவப் பிள்ளையரே வியந்து போனார்.

''மத்தியானச் சாப்பாட்டுக்கு முநதி நட்டு முடிச்சிடுவியள் போலை. சின்னம்மாக்கா ஒரு 'செற்' கொணந்தால் அது 'செற்'' தான் அவருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை அரைநாள் கூலியுடன் விஷயம் முடிந்து விடப் போகிறதே!

''எடி... நிர்மலா உந்தப் பாக்கை ஒருக்கா வெட்டிக் கொண்டா'' சின்னம்மாவுக்கு எந்த நேரமும் வாய் நிறையப்பாக்கு இல்லாவிட்டால் வேலையின் வேகம் குறைந்து விடும்.

வாய்க்கால் நீரில் கையை அலம்பிவிட்டு அந்தக்கூரான 'பீச்சாக்கத்தியை'ச் சின்னம்மாவிடம் வாங்கிப் பாக்கு வெட்டினாள் நிர்மலா.

வெட்டி விட்டாள்!

பாக்கை மட்டுமல்ல... கையையும் சேர்த்து! 'சுரீர்' என்று ஏற்பட்ட வலியில் 'ஐயோ' என்று மெதுவாகக் கத்தியும் விட்டாள். அருகில் நின்ற மகேஸ்வரி நிமிர்ந்து பார்த்தாள். இரத்தம்... நல்ல செம்பருத்தி இரத்தம்... கை முழுவதும் நனைந்து விட்டது.

நின்று நிதானிக்க நேரமில்லை வெயிலுக்காக தலையில் போட்டிருந்த பாவாடையைக் கழற்றிக்கிழித்துக் கையைச் சுற்றி இறுக்கிக் கட்டிவிட்டாள். ஆழமான காயம் போல இருக்கிறது. வியர்வை நெடி அனலடிக்கும் அந்த ஊத்தைத் துணியையும் மேவிக்கொண்டு இரத்தம் குபீரென்று வெளியேறியது. நிற்சிந்தையளாக இருக்கமகேஸ்வரியால் முடியவில்லை.

''வாடி உதிலை உந்த மில்லுக்குப் பக்கத்திலை சங்கரப்பிள்ளை டாக்குத்தரைக் கொண்டு மருந்துகட்டிக் கொண்டு வந்து... பிறகு நடுவம்...''.

நிர்மலாவைக் கையில் பிடித்துத் 'தரதர'வென்று இழுத்துக்கொண்டு போனாள் மகேஸ்வரி ''இப்ப மத்தியானம்பெருக்கு நேரம். கொஞ்ச நேரம் இரத்தம்வரும் அதுக்குப் பயந்தடிச்சு டாக்குத்தரிட்டை ஓடினம்.''

தனக்குள் சொல்வதுபோல வைரவப்பிள்ளையர் முணுமுணுத்துக் கொண்டதற்கு யாரும் பதில் சொல்லவில்லை.

'ரோட்டில் ஏறி, டாக்குத்தரைக்கொண்டு மருந்து கட்டுவித்துக்கொண்டு திரும்பிவர அரைமணித்தியாலங் கூட ஆகவில்லை.

''சின்னிவிரல்தானே! அதை உள்ளுக்கு மடக்கிக்கொண்டு தண்ணியைப்பட விடாமல் வேலையைச்செய்'',

சட்டளை இடுவதுபோல் நிர்மலாவுக்கு கூறிவிட்டு மீண்டும் மும்மரமாக வேலையில் இறங்கி விட்டாள மகேஸ்வரி

ஓர் இலைகூட அசங்கவில்லை. மூச்சுமுட்டுகிற புழுக்கம் எல்லோரையும் அலட்சியப்படுத்திவிட்டு அவர்கள் வேலை செய்ததில் பகல் இரண்டு மணிக்கெல்லாம்வேலை முடிந்து விட்டது.

வெள்ளை அரிசிச் சோறும், கத்தரிக்காய் பால்கறியும், பிழிந்த தேங்காய்ப்பூச்சம்பலுமாக மத்தியானச் சாப்பாடு தோட்டத்தில் வைத்துப்பரிமாறப்பட்ட பின்னர் வைரவப்பிள்ளையர் கேட்டார்.

''என்ன சின்னம்மாக்கா? அரைநாள் காசுதானே!''

''அதெப்படிப்பாருங்கோ, எட்டுமணிக்கு வந்து ஐந்து மணிக்குப் போறதுக்கு முழுக்காசு. இப்ப இரண்டு மணியாகுது...''

வாய்க்குள் இருந்த வெற்றிலையைத் துப்பாமலே பதில் தந்த சின்னம்மாக்காவின் பேச்சில் தெளிவில்லை.

''அப்ப என்ன? முழுக்காசு தரச்சொல்லுறியோ?'' என்று கேலி கலந்த சிரிப்புடன் வைரவப் பிள்ளையர் கேட்டார்.

''எட்டுமணி தொடக்கம் இரண்டுமணி வரையிலை ஆறு மணித்தியாலம். முழுக்காசிலை மூண்டில் இரண்டு தரவேணும்...''

—சாப்பிட்டு விட்டுக கிணற்றடி 'மிசின்' தண்ணீரில்முகம் கைகால் கழுவிக்கொண்டிருந்த மகேஸ்வரி பட்டென்று சொன்னாள். சின்னம்மாக்காவுக்கு இந்த மூன்றில் இரண்டுகளைப் புரிந்து கொள்வது கடினம்

''முழுக்காசு பன்ரண்டு ரூபாவெண்டால்... ஏழு ரூபா வேண்டலாம். என்னபிள்ளை?'' என்று சின்னம்மாக்கா தனது ஐயத்தைக் கேட்க-

''இல்லை. இல்லை, எட்டுரூபா தரவேணும்...'' என்று மகேஸ்வரி நியாயத்தை நிலைநிறுத்தினாள்.

'சரி, போனால் போகுது. எட்டு ரூபாப்படி தாறன். எல்லாம் இண்டைக்கு ரீச்சர் வந்ததாலை வந்த நட்டம், ஆனால் ரீச்சருக்கும் நிர்மலாவுக்கும் அஞ்சு ரூபாதான் தருவன் அவை இடையிலை ஆஸ்பத்திரிக்குப் போட்டு வந்தவை...'' என்றார் வைரவப்பிள்ளையர்.

''என்ன பிள்ளை, ஞாயப் சரியே?'' அவிழ்ந்து தூங்கிய வெளுத்த மயிர்களை அள்ளி முடிந்து கொண்டு கண் அலக் கேட்டாள் சின்னம்மாக்கா.

''படிப்பறிவு இல்லாத உங்களை ஒருவேளை வெருட்டலாம். என்னை வெருட்டேலாது சின்னம்மாக்கா. நான் நேரத்தை வடிவாப் பாத்தனான். பக்கத்துத் தறை கொத்திக்கொண்டிருக்கிற ஒரு ஆளிட்டைப் போகேக்கையும் வரேக்கையும் நேரம் கேட்டனான். போகேக்கை சரியாப்பதினொரு மணி வரேக்கை பதினெண்டு இருபத்தைஞ்சு ''

''ஓம்... கமலன் அண்ணை மணிக்கூடு கட்டியிருந்தவர். அவரிட்டை இவ நேரம் கேட்டவதான்'' என்று நிர்மலா அவள் சொன்னதை உறுதி செய்தாள்.

''உங்களுக்குக் கணக்குப் பார்க்கத் தெரியாட்டித் தெரிஞ்ச ஆக்களிட்டைப் போய்க் கேட்டுக்கொண்டு வாங்கோ... எங்களுக்குக் குறைஞ்சது ஏழுரூபா வென்டாலும் தரவேணும்...'' அவள் மிக ஆணித்தரமாகக் கூறிவிட்டாள்.

''தராட்டி...?''

''தராட்டி... நாங்கள் இவ்வளவு பேரும் இந்தத்தோட்டத்துக்குள்ளை சத்தியாக்கிரகம் இருப்பம். ஒருத்தரும் விட்டைபோக மாட்டம்...''

'' ... ... ''

' அதுக்கு நீங்கள் மசியாட்டி... நாங்கள் நட்ட இந்தக் கண்டுகளைப் புடுங்கிப் போட்டிட்டுப் போறம்... நீங்கள் மறுபடி ஆரேயும் கொண்டிச்சு நடுவியுங்கோ...''

வைரவப்பிள்ளையரும் இதுவரை எத்தனையோ தரப்பட்ட கூலிகளைக்கொண்டு தோட்ட வேலை செய்வித்திருப்பார். ஆனால் இப்படி...

ஒரு பெரிய போராட்டத்திற்கே ஆயத்தமாய்...?

''அவள் கேக்கிறதிலை பிழை இல்லைத்தானே!'' என்ற எண்ணத்தை உலுக்கி உதறி எறிவது வைரவப்பிள்ளையருக்குக் கடினமாகவே இருந்தது' அவரது மனச்சாட்சி உள்ளுக்குள் எழுந்து படம் விரித்தாடிற்று.

கொடுத்து விட்டார்! மகேஸ்வரி கேட்டபடியே காசெல்லாம் கொடுத்துவிட்டார்!

ஆனாலும் அவர் நெஞ்சு உள்ளே திகிலுற்றது. இவ்வாறான போராட்டங்களை வளர விட்டாலும் இவர்களுக்குக் கூலிகொடுக்கக் கட்டாது. அவர்கள் புறப்படுகையில் அவள் சின்னம்மாக்காவைத் தனியே அழைத்து.

''இனிமேல் என்ரை தோட்டத்துக்கு வரேக்கை உவ ரீச்சரைக் கூட்டிக் கொண்டு வராதயணை. ஏன்... பொதுவாவே உவவை உன்னோடை நெடுக வைச்சிருந்தால் உன்ரை சொல்லுக்கும் மதிப்பில்லாமய் போயிடும் தான் தான் எதுக்கும் முதலாளி எண்டு நிக்கிறுள் யோசிச்சுச் செய்...'' என்று ஓதிவிட்டார். ஆனால் சின்னம்மாக்கா 'மசிய'விலலை மகேஸ்வரியின் போராட்டம் அவரை அதிரச் செய்து நடுக்கி விட்டது என்பதைப் புரிந்து கொண்டாள் அவள்.

வீடு திரும்பும் வழியிலும் மகேஸ்வரி சொன்னுள்.

''ஆம்பிளையளுக்கு ஒருநாள் கூலி இருபது ரூபா குடுக்கினம் எங்களுக்கு ஏன் குறையத் தரவேணும்? தண்ணி மாறிறதிலும் பாக்க ஈரத்துக்கை நிண்டு நடுறது எந்த விதத்திலை சுகமான வேலை? நாங்கள் எங்களுக்கும் இருபது ரூபா தரவேணும் எண்டு கேக்க வேணும ?''

''நான் நினைச்சனான் பிள்ளை நீ உதுதான் சொலலப்போறுயெண்டு''

சரீரத்தை ஊடுருவி மனதில் உள்ளதை அறியும் 'எக்ஸ்-றே' அறிவு தனக்குண்டு என்று நிரூபிப்பது போலச் சொல்லிப் பெருமைப் பட்டுக்கொண்டு, வரிசைக்குத் தலைமை தாங்கி முன்னால் நடக்கிறள் சின்னம்மா.

[அடுத்த வாரம் தொடர்பவர்: எஸ். ஸ்ரீரஞ்சனி]

## யாழ்ப்பாணி பேசு தமிழ்

பொதிகையிலே பூத்த தமிழ்
பொருநையிலே வளர்ந்த
தமிழ்
அதிகையிலே அமர்ந்த தமிழ்
ஆழ்வார்கள் இசைத்த
தமிழ்

தேவர்க்கு மினிய தமிழ்
தென்னவனுர் போற்று
தமிழ்
யாவர்க்கு மினிய தமிழ்
யாழ்ப்பாணி பேசு தமிழ்

வாசகத்தைத் தந்த தமிழ்
வன்னியர்கள் ஆண்ட தமிழ்
தேசபக்தி நிறைந்த தமிழ்
தெய்வபக்தி உறைந்த தமிழ்

தேவாரம் இசைத்த தமிழ்
தெய்வத்தை வசைத்த
தமிழ்
பூவாரம் போன்ற தமிழ்
புண்ணியத்தாய் ஈன்ற
தமிழ்

முப்பானூல் வடித்த தமிழ்
முத்தாரம் போன்ற தமிழ
எப்போதும் இனிய தமிழ்
எல்லார்க்கும் ஏற்ற தமிழ்

காப்பியங்கள் படைத்த
தமிழ்
காவலர்கள் காத்த தமிழ்
மூப்பினுல் முதிய தமிழ்
முடி மன்னர் புதிய தமிழ்

புராணங்கள் எழுந்த தமிழ்
புடபங்கள் போற்ற தமிழ்
கிராணங்கள் சொன்ன
தமிழ்
கிராமியத்தார் வளர்த்த
தமிழ்

நாடகத்தில் சிறந்த தமிழ்
நாட்டியத்தில் நிறைந்த
தமிழ்
ஏடகத்தில் ஏற்ற தமிழ்
எங்கெங்குமினிய தமிழ்

— முருக வே. பரமநாதன்



அண்மையில் ரோம்நகர் சென்ற யாழ் ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்தார்.


# Radio and Electronics Engineering Course

WEEK - END CLASSES

## யாழ். நகரில்

சகல தொழில் நுட்ப வசதிகளுடனுன எமது நவீன ஆய்வுகூடத்தில் இலங்கையில் தன்னிகரற்றுத் திகழ்ந்த ஆசிரியர்களிடமிருந்து கற்று நிறை பலன் பெற நாம் அளிக்கும்

## PART - I - 6 மாதம்

★ RADIO: பழுதறப் பழுது பார்க்கவும் பிறர் உதவியின்றி உருவாக்கவும்.

★ TAPE RECORDER
★ HI-FI STEREO AMPLIFIER
★ RADIOCONTROL
★ TRANSFORMER

இவற்றோடு இன்னோரன்ன பல இலத்திரனியற்கருவிகள் யாவற்றின் அடிப்படை அமைப்புக்குரிய தெளிவான Theory and Practicals ம் அவற்றைப் பாரியமுறையில் உருவாக்கவும் பழுது பார்க்கவும்.

★ DIGITAL ELECTRONICS: Theory and practicals

★ ஒளியின் தாக்கத்தால் இயங்கும் இலத்திரனுக்குரிய கருவிகளை உருவாக்கவும்.

★ HI-FI Stereo Phonic Amplifiers, Battery Eleminators போன்ற பல இலத்திரனியற் கருவிகளும் விற்பனைத் தரத்தில் தயாரிக்கும் தொழில் நுட்பமும் புகட்டப்படும்.

★ பயிற்சி முடிவில் எம்மால் இலவசமாக வழங்கப்படும் உதிரிப் பாகங்களைக் கொண்டு உதவி எதுவுமின்றித் தாமாகவே வானொலியொன்றைச் செய்து முடிக்கும் திறமையைப் பெறுவதோடு அவற்றைப் பாரிய முறையில் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தையும் பெற்றுக் கொள்வர்.

★ எமது தொழிற் கூடத்தில் வானொலி உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் முறையில் இலவச பயிற்சி அளிக்கப்படும்.

## PART - II - 3 மாதம்

★ T. V,
★ VIDEO RECORDERS
Theory and Practicals பழுது பார்த்த

★ பரீட்சை முடிவில் தேறுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

★ வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

கட்டணம்: PART - I ரூபா 1500/-
PART - II ரூபா 1000/-

தவணை முறையிலும் கட்டணத்தைச் செலுத்தலாம்.

ஆரம்பம்:
வார இறுதி வகுப்புகள் — 1-9-84
வார நாள் வகுப்புகள் — 5-9-84

CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA.
T'PHONE: 24201


## இன்று

மாதம்- ஆவணி
திகதி- [ 6-08-1984]
வாரம்- ஞாயிறு
திதி- அமாவாசை பின் இரவு 2 மணிவரை,
நக்ஷத்திரம்- ஆயிலியம் காலை 9-25ன் மேல் மகம்.

# பார்வதி மைந்தன் பவனி காண்போமே

சிந்து காவடி சல்லரி மேளம்
செப்பரி தாகிய வேலவன் கோவிலில்
சிந்தை கவர்ந்திடு செந்தமிழ் கீதங்கள்
செந்தூர் நாயகன் சந்நிதி வாசலில்
கொப்பு குழல்தவில் தாரைகள் தம்பூர்
கோதைய ருங்குடக் காவடி யாடுவர்
பம்பை பேரிகை பறவைக் காவடி
பைந்தமிழ்க் காவலன் செந்தூ ரான்பதி
சுடலை யாடியன் தூமதி சூடியன்
மழலை யானவன் மாமயில் வாகனன்
தொடரு வல்வினை போக்கி யருள்பவன்
சோதி அம்பரன் சுதனுய் வந்தவன்
இடர்சு ளைந்திடு வேல்கர முற்றவன்
இனிமை தங்கு தமிழ்க்கவன் கொற்றவன்
மடவார் தம்மிரு புறத்தில் வைத்தவன்
மங்கள நல்லூரில் தங்கி யருள்பவன்
தீர்த்தமாடி அருள் மழை நல்குவான்
ஆதவன் போல்முக சோதி யொளிவிட
பவள மாமணி முத்துக்கள் மின்னிட
பாவைய ருமிரு பக்கமி ருந்திட
குவளை போல்முக எழில் துலங்கிட
கூத்தனும் பார்த்து மகிழ்ந்தி ருந்திட
பழனி மாமலைப் பதியி ருப்பவன்
பார்வதி மைந்தன் பவனி காண்போமே!

முல்லைக்கவி

★ நல்லையில் இன்று தீர்த்தத் திருவிழா

# இவ்வாரம் எப்படி?

### மேஷம்

சிக்கல்கள் தடுமாற வைக்கும். சிறியோர் சீற்றம் பெரிய மாற்றங்களை உருவாக்கும், குடும்பநிலையில் சிறு புயலுககுப் பின் அமைதிநிலவும். இனபந்துக்கள் மத்தியில பூசல்கள் தோன்றும், வணிகர்கள் பாதையில் வறட்சிதென்படும் சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். துர்க்கையம்மனை வழிபடவும்;

### ரிஷபம்

தாய்வழியால் சுகமும் வாகன விஷயத்தில் சில திருப்பங்களும் சகோதரர் சஞ்சலங்களும் உண்டு. சட்டதிட்டங்களுடன் பங்கு பற்றும் வாய்ப்புக்களும் உருவாகும். குடும்பம் கடமையுணர்வுடன் செயல்படும். திடீரென ஏற்படும் முடிவுகள் தங்களை அடிசறுக்க வைக்கலாம். பத்திரகாளியம்மனை வழிபடவும்.

### மிதுனம்

புத்திரர் மகிழ்ச்சியும் புதுமையில் நாட்டமும் பெரியோர் வாழ்த்தும் கிட்டும். வாழ்க்கையில் சிறு ஏமாற்றமும், வசதிகள் வழமைக்கு மாறாகவும் இருக்கும். பொறுமையின் நிழல் தொடரும். பெரும் புகழைப் பேச்சுவன்மையால் தேடிக் கொள்வீர்கள். சில அதிர்ஷ்டங்களும் இடம்பெறலாம். தட்சணாமூர்த்தி பெருமானை வழிபடவும்.

### கடகம்

ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும். புத்திரர் மகிழ்ச்சியைத் தேடித்தருவர். சிநேகிதவழியால் நல்ல பெயரும் கிடைக்கும். சிறுபிரிவுக்கும் சிறு ரோகத்திற்கும் இடமுண்டு. இவ்வாரம் சுப்பிரமணியரை வழிபடவும்.

### சிம்மம்

வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் ஏற்படும், அவசரக்கோலம் சிக்கலைத்தோற்றுவிக்குப். வீணான சிந்தனைகளால் சோர்வு நிலை தென்படும். செய்தொழில் சிறப்புண்டு. சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்படும். நீண்டபிரயாணங்கள் குறித்துத் திட்டமிடப்படும். தனவரவிற்கும் இடமுண்டு கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் உருவாகும். சூரிய பெருமானை வழிபடவும்.

### கன்னி

தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும். தாம்பத்தியவாழ்க்கையில் மகிழ்ச்சி காணப்படும். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று. நீண்டநாள் கொடுத்த கடன் மீண்டும் வந்துசேரும், விஷ்ணு பெருமானை வழிபடவும்.

### துலாம்

காதலர்எண்ணம் கைகூடும், பிதாவழித்தனமும் சேரும். பொறியியலாளர்கள் போற்றப்படுவர். நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைகல்லாக இருப்பர். வைத்தியச் செலவிற்கும் இடமுண்டு. களஸ்திரப்பேச்சும் அவ்வழிச்சுகமும் வரவுமுண்டு. வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். எதிர்பாராத விபத்துக்களுக்கும் இடமுண்டு எதிலும் நிதானம் வேண்டும். சனீஸ்வரப்பெருமானை வழிபடவும்.

### விருச்சிகம்

சொகுசான வாழ்க்கையை விரும்புவீர்கள் பெரியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும் வருமானங்கள் திருப்தியாக இருக்கும். புதுமுகங்களின் அறிமுகங்களும் எண்ணங்களின் அலைமோதலும் ஏற்படும். பொதுவழியால் பெருமையும், தனமும்' சனமும் தேடித்தரும், சிவசுப்பிரமணியப் பெருமானை வழிபடவும்.

### தனுசு

எதிர்பார்த்த விடயத்தில் தடைகள் ஏற்படும். இல்லத்தில் இனசனம் கூடும். குழந்தையொன்றின் உடல்நலம் திருப்தியைத்தரும். தொழில் விடயத்தில் மந்தம் ஏற்படும். பொறுப்பேற்ற காரியம் ஒன்று கவலையைத்தரலாம். வாகனம் வைத்திருப்போர் அவதானம் வேண்டும். துர்க்கையம்மனை வழிபடவும்.

### மகரம்

பொருளாதாரத் துறையில் உயர்ச்சி தென்படும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தில்மாட்டாதீர். புதுத்தொழில் துறைகளில் மனம் நாடும். தூரதேசப் பிரயாணங்களும் செய்திகளும் கிட்டலாம். சிலருக்குப் பூமி மாற்றங்களும் புதுமனைகோல திட்டங்களும் உருவாகும். பிதாவழிப்பெருமையும் பெரியோர் புகழும் கிட்டும். தட்சணாமூர்த்திப் பெருமானை வழிபடவும்.

### கும்பம்


அவசரப்போக்கையும் ஆத்திரத்தையும் தவிர்க்கவும். பயணங்களின் போது மிக்க கவனம் வேண்டும் செலவுக்கு பணம் தாராளமாகக் கிடைக்கும் கௌரவம் உயரும். சுப்பிரமணிய சுவாமியை வழிபடவும்.

### மீனம்

அரசபயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும். சகோதரவழி மனக்கிலேசத்திற்கும் இடமுண்டாகும். குடும்ப நிலை நிறைந்த செல்வாக்கைக் கொடுக்க மறுக்கும். திடீரென ஏற்படும் தீர்ப்புகள் சிக்கலை உண்டு பண்ணும் வருவாய் நிலையில் வசதிக்கேற்ற முறையில் செலவுகளும் உண்டாகும். சனீஸ்வரப் பெருமானுக்குப் பூசைசெய்யவும்.

திருமலை.க.வே.ரவீந்திரன்

# கடல்கோட்டை



செங்கை ஆழியான்

## இராசவாசல் முதலியார்

13

யாழ்ப்பாணம் நீண்ட காலத்தின் பின்னர் பழைய நிலைக்குத் திருப்பியது. போர்த்துக்கீசரின் ஆட்சி ஒழிந்து, ஒல்லாந்தரின் ஆட்சி யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்தப்பட்டது. போர் அபாயம் நீங்கியதால் மக்கள் வழமை போலத் தம் நாளாந்த வேலைகளில் ஈடுபடத்தொடங்கினர்,

புவிநாயக முதலியாரின் வில்வண்டி ஒருநாள் அதிகாலை இராசவாசலை நோக்கிக் கம்பீரமாக விரைந்தது. ஒன்பது மாதங்களுக்கு முன்னர் ஓர் இரவு இராசவாசலில் நடந்த விருந்தின் பின்னர் இப்போது தான் அவருக்கு அழைப்பு வந்திருந்தது.

போர்த்துக்கீசரின் ஆட்சியில் நல்லூர் புவிநாயக முதலியாரே இராசவாசல் முதலியாராகக் கருதப்பட்டார். யாழ்ப்பாணக்கோட்டையில் தங்கியிருந்த கமாண்டருக்கு இவரே பிரதான ஆலோசகராக இருந்தார். அவரைவிட வேறு நான்கு முதலியார்கள் யாழ்ப்பாணத்தில் நான்கு நிர்வாகப் பிரிவுகளான வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகியவற்றுக்கு இருந்தார்கள். யாழ்ப்பாணப்பட்டினத்திற்கும் கரையூர்ப்பகுதிக்கும் அந்திராசி என்பான் முதலியாராக இருந்தான். அவர்களைவிட ஊர் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு உடையார்கள், வரி திறை என்பவற்றைச் சேகரிப்பதற்கு பண்டாரப்பிள்ளைகள், கிராமங்களைக் கண்காணிப்பதற்கு தலையாரி என்போர் இருந்தனர்.

இந்த நிர்வாக முறையை ஒல்லாந்தர் மாற்றியமைக்க முயலவில்லை இந்த நிர்வாக அதிகாரிகளைக் கோட்டைக்கு வருமாறு வன்கோயன் அழைப்பு விடுத்திருந்தான். அந்தக் கூட்டம் இன்று இராசவாசலில் கூடவிருந்தது.

வண்டிலைச் செலுத்திவந்த முருகையன், மெதுவாகப் புவிநாயக முதலியாரிடம் கேட்டான்: "இந்த ஒல்லாந்தேசுகள் எப்படிப்பட்டவர்கள், ஐயா?"

புவிநாயக முதலியார் வண்டிலோட்டியை ஏறிட்டுப் பார்த்துவிட்டுச் சிறிது யோசிப்பவர் மாதிரி இருந்தார்.

"ஆருக்குத் தெரியும், முருகையா? அவர்கள் நடந்து கொள்ளும் முறைகளில் பார்க்கும் போது போர்த்துக்கீசப் பறங்கிகளிலும் பார்க்கப் பரவாயில்லைப்போலப்படுகிறது."

"இவர்களும் மாடு தின்னிகளோ?"

"ம்..." அவன் கேள்வியின் உட்பொருளை அவர் புரிந்து கொண்டார். போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தில் தம் ஆட்சியை நிலைப்படுத்தியதும் நெடுந்தீவிலிருந்து மாடுகளை இறக்குமதி செய்து தின்று தீர்த்தார்கள் பின்னர் யாழ்ப்பாணத்திலிருக்கும் ஒவ்வொரு பிரசையும் ஒவ்வொரு நாளும் முறைவைத்து ஒவ்வொருமாடு இராசவாசலுக்கு வழங்க வேண்டுமெனப் பகாசுரக் கட்டளைபிட்டார்கள். அதன் விளைவு சைவர்களின் மனதை வருத்தியது. பலர் இக்கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்துத் தென்னிந்தியாவிற்கு ஓடிப்போய் வேதாரணியத்திலும் சிதம்பரத்திலும் குடியேறினார்கள். திருநெல்வேலியில் வழ்ந்த ஞானப்பிரகாசரும் இராசவாசலுக்கு மாடு வழங்கும் முறைவந்ததும் இரவோடிரவாகக் காணமல் போனார் வேதாரணியத்திற்குச் சென்று மிலேச்சர்களின் செயல் தந்த வெறுப்பால் துறவியாகிவிட்டார்.

போர்த்துக்கீசர் போன்று ஒல்லாந்தர் இருக்கமாட்டார்கள் என அவர் எண்ணிக்கொண்டார் இராசவாசலில் பெரியதொரு சமையலறை இருக்கின்றது போர் வீரர்களுக்குச் சமையல்அங்குதான் பெருமளவில் நடக்கும். அச்சமயலறையில் முழுமாட்டை அப்படியே பொரிக்கக்கூடிய வசதியிருப்பதை ஒருநாள் அவர் கண்டிருக்கிறார்.

"ஒல்லாந்தேசுகள் பழைய கோட்டை இருந்தவிடத்தில் புதியதொரு கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறார்களாம் ஐயா மூவாயிரம் கூலிகள் இராப்பகலாக வேலை செய்கிறார்களாம்... போர்த்துக்கீசப் பறங்கிகள் இடித்துத் தள்ளிய கோயில்களில் எஞ்சியிருக்கும் பொழி கற்களை, வரிசையாக மக்களை நிற்கவைத்துக் கைவாறாகக் கோட்டை கட்டுமிடத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கிறார்களாம். மிகப் பெரியகோட்டையாம் கோட்டையைச் சுற்றிப் பெரியதொரு அகழியும் வெட்டப்படுகிறதாம்..." என்றான் முருகையன். இவை புவிநாயக முதலியாருக்குத் தெரிந்த விடயங்கள் தாம்.

எத்தனை இந்துக்கோவில்கள் இடிக்கப்பட்டன?

வண்டில் கோட்டையை நெருங்க நெருங்க கலகலப்புத் தோன்றியது. பழைய கோட்டை இருந்தவிடத்தில் புதியதொரு கோட்டை கட்டுவதில் ஒல்லாந்தக் கட்டிடக் கலை விற்பன்னர்களும் கூலிகளும் அடிமைகளும் ஈடுபட்டிருந்தார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை ஒரே நேரத்தில் வெவ்வேறிடங்களில் வைத்து வேலை வாங்கிக் கொண்டிருந்தார்கள். பழைய கோட்டையின் உட்பகுதிகள் சீர்படுத்தப்பட்டிருந்தன.

கோட்டைவாசலில் அவர் ஒல்லாந்த வீரர்களால் விசாரிக்கப்பட்டார் பின்னர் கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார். மண்டபத்தில் பல பிரதானிகளும் நிரம்பியிருந்தனர்.

மண்டபத்தில் இருக்கைகள் பதவி வரிசைக்கு ஏற்ப இடப்பட்டிருந்தன மேடையில் ஒரு இருக்கை அலங்காரத்துடன் இருந்தது. அதன்கீழ் வலதுபக்கம் இரு ஆசனங்களும் இடதுபக்கம் இரு ஆசனங்களும் இடப்பட்டிருந்தன இடதுபக்க ஆசனங்களிலிருந்து சற்று விலகி இன்னொரு இருக்கை இடப்பட்டிருந்து

ஏனைய இருக்கைகள் மண்டபத்தில் வரிசைக்கிரமமாக இடப்பட்டிருந்தன.

கொமுசாறி வன்கோயன் பலர் புடைசூழ மண்டபத்திற்குள் வந்தான் யாவரும் எழுந்து நின்றார்கள். மேடை இருக்கையின் முன் அவன் நிற்க, ஏனைய இருக்கைகளின் முன் ஏனையோர் நின்றார்கள். மேடை முன்இருந்த இருக்கைகளில் ஒன்று வெற்றிடமாக இருந்தது. வன்கோயனின் விழிகள் ஒருகணம் அதில் நிலைத்தன. அவன் டச் மொழியில் ஏதோ சொல்ல அவன் அருகில் வந்து நின்றிருந்த மொழிபெயர்ப்பாளன் அதனைத் தமிழ்படுத்தினான்.

"யாழ்ப்பாணப்பட்டினத்தில் இராசவாசல் முதலியார் அந்த இருக்கையில் அமரும்படி கேட்கப்படுகிறார்..."

புவிநாயக முதலியார் முன்னால் நடந்து வந்தார். உத்தரியமும் பஞ்சகச்சமும் தரித்து சந்தனப்பொட்டுடன் முன்னே கம்பீரமாக நடந்து வந்த அந்தக்கிழவரை வன்கோயன் ஆழமாகப் பார்த்தான். அவன் மனதில் மரியாதை உணர்வு எழுந்தது


வன்கோயன் இருக்கையில் அமர்ந்ததும் எல்லாரும் அமர்ந்தனர்,

அவன் எழுந்தான்.

"யாப்பாணப்பட்டினப் பிரதானிகளே..." என்று விழித்த அவன், தன்னை முதலில் அறிமுகப்படுத்திக் கொண்டான் பின்னர் தன்முன் அமர்ந்திருந்தவர்களை அறிமுகப்படுத்தினான். இக்கோட்டையின் கமாண்டர் றுத்தாஸ் இவர். வைஸ் கமாண்டர் அட்றின் வன் லெனன் இவர். றியர் அட்மிறல் றென்ஸ் ஜன்சன் இவர். இவர் தான் வணக்கத்திற்குரிய குரு பிலிப் பால் தேயஸ்..."

கொமுசாறி வன்கோயன் தன் நாட்டைப்பற்றியும் தங்கள் வருகையைப்பற்றியும் சொன்னான். வாழ்க்கைநிலையில் தாழ்ந்த மக்களை உயர்த்தி அவர்களைத் தங்கள் நாட்டு மக்கள் போன்று உயர்த்துவதற்காகத் தாங்கள் வந்ததாகக் கூறினான். உன்னதமதமாம் புரட்டஸ்தாந்து மதத்தை இங்கு பரப்பி மக்களை உய்விக்க வந்ததாகக் கூறினான்.

சபையில் இருந்த ஒரு குரல் ஒலித்தது 'பெரிய ஒல்லாந்தேசு வாழ்க."



சபையினர் அதனை முழக்கமிட்டனர் வன்கோயன் வியப்புடன் மொழிபெயர்ப்பாளனைப்பார்த்தான்

'பெரிய ஒல்லாந்தேசு வாழ்க என்கிறார்கள்"

'யார் பெரிய ஒல்லாந்தேசு..."

'அது நீங்கள் தான்."

"நல்ல பெயர்' என்று சிரித்தான் வன் கோயன்

சபையினர் அடுத்து, 'சின்ன ஒல்லாந்தேசு வாழ்க" என்றனர்.

"அது கமாண்டர் றுத்தாஸைக் குறிக்கின்றது." என்றான் மொழிபெயர்ப்பாளன்

கமாண்டர் றுத்தாஸ் வியப்புடனும் அன்புடனும் சபையினரைப் பார்த்தான.

"சுவாமிகள் வாழ்க..."

"அது வணக்கத்திற்குரிய குரு பால்தேயஸ் அவர்களைக் குறிக்கிறது .."

யாழ்ப்பாண மக்களின் ஒட்டிஉறவாடும் பண்பினை வன்கோயன் புரிந்துகொள்ளத் தொடங்கினான்.

புவிநாயக முதலியார் பிரதானிகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் வன்கோயன் சில முடிவுகளைச் சபையில் எடுத்துச் சொன்னான்:

தென்மராட்சிப் பிரிவுக்கு முதலியார் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் திசைவீரசிங்க முதலியார் பத்தேவியாவிற்கு இராசப்பிரதிநிதியைச் சந்தித்து வரச் சென்றிருக்கிறார். அதனால் அதுவரை அப்பிரிவை நிர்வகிக்க ஒருவரை நியமிக்க வேண்டும் இராசவாசல் முதலியாரே, ஒருவரை நீங்களே கூறுங்கள்..." என்று வன்கோயன் கேட்டான்

"தென்மராட்சியில் இப்போது முதலியாராக நியமிக்கப்படக் கூடியவர் சாவகச்சேரி உடையாராக இருக்கும் மார்க்கண்டேய பிள்ளை அவர்கள் என்பது என் கருத்து, துரை அவர்களே ..."

"அவரையே நியமிப்போம். உடையாராக இருப்பவர் நிர்வாக அனுபவம் கொண்டிருப்பார் அவர் இங்கு இருக்கிறாரா?..."

மார்க்கண்டேய பிள்ளை எழுந்து வணக்கம் தெரிவித்தார்.

"உமக்குரிய நியமனப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும் என்றான் வன்கோயன்."

"இன்னொரு விண்ணப்பம் துரை அவர்களே..." என்றார் புவிநாயக முதலியார்

"சொல்லுங்கள்..."

"தென்மராட்சிமுதலியாரே, கச்சாய் துறையின் வன்னிமையமாகவும் இருப்பது வழக்கம்...... அதனால்..."

"இல்லை இல்லை... இரண்டு பதவிகளையும் ஒருவர் வகிப்பதால் நிர்வாகத்திறன் குறையும் கச்சாய் நமக்குப் பிரதானதுறை அதனால் அதற்கு வன்னிமையாக இன்னொரு தகுதியானவரை நியமிக்க வேண்டும். அவர் திசைவீரசிங்கன் போன்று இளமையும் வீரமும் கொண்டவராக இருக்கவேண்டும். இச்சபையில் அனுபவமும் முதிர்ச்சியும் கொண்டவராக நீங்களே காணப்படுகிறீர்கள். சச்சாய் வன்னிமைக்குத் தகுந்த ஒருவரைக் கூறுங்கள்..."

புவிநாயக முதலியார் வன்கோயனின் அன்பிற்கும் மரியாதைக்குமுரியவராக மாறிவிட்டார் என்பது தெளிவாகப்புரிந்தது இராசவாசல் முதலியார் என்பது பிரதம ஆலோசகர் போன்ற பதவி. வன்கோயன் அவர் மீது நம்பிக்கைவைத்து கச்சாய் வன்னிமைக்கு ஒருவரைத் தெரிவிக்குமாறு கேட்டான் புவிநாயக முதலியார் சிறிது நேரம் சிந்தனை வயப்பட்டார்.

அந்தப் பதவியின் பிரச்னைகளை அவர் நன்கறிவார். வன்னியர்களிடமிருந்து திறைகளை வசூலிப்பதும் சுங்கக்கவறுகளை வசூலிப்பதும் இலகுவான செயல்களல்ல. வன்னி

(8ம் பக்கம் பார்க்க)

## காற்றுத்தரும் சேதி. . .

"வாடை வாட்டுது... ஒருபோர்வ கேக்குது..."— வானொலியில் அடிக்கடிஒலிக்கும் ஒரு பாடல் இது.

வாடைக் காற்றைக் குளிர்ந்த காற்று என்ற கருத்துப்பட இப்பாடல் இயற்றப்பட்டுள்ளது. உண்மையில் வாடைக்கும் குளிருக்கும் எவ்வித சம்பந்தமுமே இல்லை.

வடக்குத் திசையிலிருந்து வீசும் காற்று என்ற காரணத்தால் அதற்கு வாடைக்காற்று என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது. குளிர்காலத்தில் வடக்கே இருந்து காற்று வீசினால், அதுதான் கடும் குளிராக இருக்கும்.

தென்றல் காற்றை மந்தமாருதம் என்றும் சொல்கிறோம். மெத்தென்று சுகமாக வீசுவதால் அதற்கு மந்தமாருதம் என்று பெயர் வந்ததாம்.

வசந்த காலத்தில் தென்றல் வீசுகிறது தெற்குத் திசையிலிருந்து வீசுவதனால் அதற்குத் தென்றல் என்று பெயர் வந்துள்ளது. தென்றலை வட இந்தியர் தென் கால் என்று சொல்லுகிறார்கள்.

மேல் காற்று வறட்சியானது. மரங்களை உலுக்கிக் காய்களை உதிர்க்கும் அதற்குக் கோடை என்று பெயர். குடக்கு என்பது தமிழில் மேற்கைக் குறிக்கும் சொல்லாகும் மேற்குத் திசையிலிருந்து வீசும் மேல்காற்றே குடக்காற்று என்று வழக்கில் வந்து அதுவும் பின்னர் மருவி, சோடையாயிற்று.

கிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்று கீழ்க்காற்று. கீழ்க்காற்றைக் சொண்டல் என்று கூறுவார்கள்.

எனவே நான்கு திக்குகளிலிருந்தும் வீசும் காற்றுகளுக்குத் தனித்தனியே தமிழர் பெயர் வகுத்திருக்கின்றனர் என்று புலனாகின்றது

— "என்னெஸ்"

## குருடும் ஓர் அருட்கொடை

பஸீர் என்ற கவிஞர் ஒரு கலீபாவின் அவையில் அமர்ந்திருந்தார். ஒரு குருடர். கலீபா என்றும் பஸீரையும் அவரது பாடல்களையும் குறை கூறிக் கொண்டே இருப்பார். ஒரு முறை அவர் கவிஞரிடம் கேட்டார்

''மனிதனுக்கு இறைவன் ஏதேனும் ஒரு குறையைப் புலன்களில் ஏற்படுத்தி இருந்தால், வேறு ஏதேனும் சிறப்புக்களைக் கொடுப்பான். ஆனால் பஸீரே! உமக்குக் கண் பார்வையை இல்லாமலாக்கிய இறைவன் வேறு எந்தச் சிறப்பையும் கொடுக்கவில்லையே. ஏதேனும் உம்மிடம் உண்டா?''

''கலீபாவே! என்னைப் பொறுத்த வரையில் குருடும் அருள்தான். அதனால்தானே உம்மைப் போன்ற அறிவுச் சூனியங்களைப் பார்க்காமல் இருக்கமுடிகிறது'' என்றார் கவிஞர்.

தொகுப்பு: சச்சி

## கைலாசபதி கலையரங்கில்

### ஒரு பிஞ்சுக் கலைஞர்

செல்வன் மதனகரன் தயாபரனின் முதலாவது புல்லாங்குழல் அரங்கேற்றம் கடந்த மாதம் பதினொராந் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றது. இரண்டு மணி நேரத்துள் திட்டமிட்டபடி முறையாக அரங்கேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

மங்கள விளக்கேற்றலை அடுத்து நிகழ்ச்சி 'நவராக மாலிகா வர்ணத்துடன்' ஆரம்பித்து, 'ஞானவிநாயகனே' என்ற கம்பீரநாட்டை ராகத்திலமைந்த பாடலுடன் களை கட்டியது அடுத்து ஹிந்தோள ராகத்தில் 'சாமஜவரகமன', ஆபேரி ராகத்தில் 'நகுமோமு' என்ற கீர்த்தனைகள் இடம் பெற்றன. 'சேவிக்கவேண்டும்' என்ற ஆபோகிராக கீர்த்தனையும், 'ராமாநின்னு' என்ற மோகனராக கீர்த்தனையும் அவற்றிற்கு வாசிக்கப்பட்ட ஆலாபனை, ஸ்வரங்களும் விஸ்தாரமாகவும் அழகாகவும் அமைந்தமை, நிகழ்ச்சித் தரத்தின் சிறப்பம்சங்களாகும். இடையே தலைமையுரை, சிறப்புரைகளை அடுத்தும் நிகழ்ச்சி களைகுன்றாது தொடர்ந்தது மேலும் இடம்பெற்ற பாடல்களுள் குழலிசைக்கே பொருத்தமான 'அலைபாயுதே' என்ற கானடாராக பாடல் மென்மையாக வாசிக்கப்பட்ட விதம் மிகச் சிறப்பாயமைந்தது. தெலுங்கு, தமிழ், சமஸ்கிருத மொழிகளில் வெவ்வேறு ராகதாளத்தில் அமைந்த உருப்படிகளைக் கொண்ட இந் நிகழ்ச்சி திருப்புகழுடன் முடிவுற்றது.

கச்சேரி மெருகு குன்றாமல், சிறந்த பக்கபலத்தை அளித்தசெல்வி பாக்கியலக்ஷ்மி நடராசா அவர்களின் வயலின், செல்வன் ப. கிருபாகரன் அவர்களின் மிருதங்கம், செல்வன் ஆனந்தராஜா அவர்களின் கஞ்சிரா மிகவும் எடுப்பாக இருந்தன. மொத்தத்தில் இவரது அரங்கேற்றம் தகுந்த இசைச்சிறப்புடன் சம்பிரதாய முறைப்படி நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளும் இவ்வேளையில் தமது பாடசாலைக் கல்வியுடன் கலைத்துறையில் அதுவும் இசைத்துறையில் இவ்விளம் வயதிலேயே முழுமையான ஈடுபாடுசெலுத்தி இந்த சாதனையை புரியும் தரத்தினைச் செல்வன் தயாபரன் பெற்றமை பாராட்டுக்குரியது. இவரது ஆற்றலையும் இசையின் மேன்மையையும் உணர்ந்து அதனைப்பயனுள்ள முறையில் வளர்க்க தக்க சூழ்நிலையையும், வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்து, ஊக்கம் அளித்த இவரது பெற்றோராகிய திருவாளர் மதனகரன், திருமதி மதனகரன் அவர்களே பாராட்டுக்குரியவர்கள் மேலும் இயற்கையாகவே இசை ஞானம் பெற்ற இம் மாணவனுக்கு முறைப்படி புல்லாங்குழல் இசையைக் கற்பித்து சிறப்பாக அரங்கேற்றிய பெருமை இவரின் குருவான திருவாளர் செல்வநாயகம் அவர்களைச்சாரும். அன்று அவ்வரங்கில் சிறந்த வேணுகானத்தை அளித்த செல்வன் மதனகரன் தயாபரனை சமூகமளித்தோர் யாவரும் மனமார வாழ்த்திச் சென்றனர். இவ்வரங்கேற்றத்திற்கு உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை தாங்கியதுடன் சிறப்பு விருந்தினர்களாகபேராசிரியர் கா. இந்திரபாலா, திரு. சி. ஈ ஆனந்தராஜன், திருமதி சத்தியபாமா இராஜலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். வயதுக்கு மீறிய முதிர்ச்சியுடன், தரமானதொரு கச்சேரியை அரங்கேற்றம் என்ற பெயரில் தந்த ம. தயாபரனுக்கு சங்கீத உலகில் நிச்சயம் ஒரு நல்ல எதிர்காலம் உண்டு என்பதில் ஐயமில்லை.

பா. ரேணுகா.

## துடக்கு!

கிணறு வெட்டுவதும்
வீடு கட்டுவதும்
அவர்கள்தான்
ஆனால்...
கிணறு வெட்டியதும்
அந்தக்கிணற்றிலே
அவர்கள் தண்ணீர்
அள்ளுவதற்கு
அனுமதிப்பதில்லை
ஏனென்றால்...
அவர்களைத் தண்ணீர்
எடுக்க விட்டால்
அது துடக்காம்
இதே போல்தான்
வீடு கட்டியவுடன்
வீட்டிற்குள்ளே
அவர்களுக்கு
அனுமதியில்லை
ஏனெனில்
அதுவும் துடக்காம்...
அரிசியை மாவாக
இடிப்பதும்
அவர்கள்தான்
அதன்போது
பாத்திரங்களைத் தொடலாம்
ஆனால்...
பின்பு தொடுவதற்கு
அனுமதிப்பதில்லை...
ஏனெனில்...
இதுவும்...
ஒருவகைத் துடக்காம்!

என். கே. துரைசிங்கம்

## கடல்கோட்டை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யர்கள் திறையாகச்செலுத்தும் யானைகளைச் சில காலங்களில் வழங்காது விட்டுவிடுவார்கள். அவ்வேளைகளில் நயமாகவும் பயமாகவும் பேசிக்காரியத்தைச் சாதிக்கும் திறன் உடையவன்தான் கச்சாய் வன்னிமையாக இருக்க முடியும். அதுமட்டுமல்ல, வன்னிக்காட்டில் தேவை ஏற்படும்போது யானைகளைப் பிடித்துக்கொடுக்கும் பணிக்கர்களை அடக்கி வேலைவாங்குபவனாகவும் இருக்கவேண்டும். கச்சாய் வன்னிமை மூலம் ஆட்சியாளர் பெறும் வருமானம் அதிகமாதலால் இராசவாசல் முதலியாருக்கு அடுத்ததாக மிகுந்த அதிகாரமும் செல்வாக்கும் கொண்டவனாக கச்சாய் வன்னிமையே விளங்கினான்.

திசைவீரசிங்கன்தான் அப்பதவிக்கு ஏற்றவன்

புவிநாயக முதலியார் பல பெயர்களைப்பிரேரித்தார். அப்பெயர்களுக்குரியவர்கள் சபையில் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும்எழுந்துஅந்தப் பதவியைமறுத்துவிட்டார்கள் கடைசியாகப் புவிநாயக முதலியார், ''திருநெல்வேலிக் கிராமத்தலைவன கயிலாயபிள்ளையை அப்பதவிக்கு நியமிக்குமாறு வேண்டுகிறேன்'' என்றார்.

சபையில் கைலாயபிள்ளை இருந்தான். அழகிய திடகாத்திரமான இளைஞன். அவன் தன்னை சபைக்கு அடையாளங் காட்டிக்கொண்டான்.

''இவரையே முதலில் பிரேரித்திருக்கலாமே முதலியார்?'' என்று வன்கோயன்கேட்டான்.

''அவன் என் மருமகன்...'' என்றார் புவிநாயக முதலியார், அடக்கத்துடன்.

''கையிலாயபிள்ளையை கச்சாய் வன்னிமையாக நியமிக்கிறேன்...''

''இன்னொரு விண்ணப்பம்'' என்றார் புவிநாயகமுதலியார். வன்கோயன் அவரைப்பார்த்துத் தலையசைத்தான்.

''எனக்கு வயதாகிவிட்டது... அறுபத்திரண்டு வயது, ஆகவே எனக்கு ஓய்வுதேவை துரை அவர்களே. எனக்கு ஓய்வுதருவதுடன் எனதுஇடத்திற்கு என்மகன் பூதத்தம்பியை நியமிக்குமாறு தயவாகக்கேட்டுக் கொள்கிறேன்.''

சபையில் சலசலப்பு எழுந்தது. முதலியார் பதவி பரம்பரையான பதவிதான். நல்லூர் வெகுகாலமாக யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராகவிருந்தது, அதனால் நல்லூர் முதலியாரே இராசவாசல் முதலியாராக நியமிக்கப்பட்டுவந்தார்.

போர்த்துக்கீசர் யாழ்ப்பாணக் கரையில் கோட்டை கட்டிய பிறகு கரையோரமாக மக்கள் குடியிருப்புகள் அதிகரித்தன அதனால் யாழ்ப்பாணப் பட்டினத்தின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கென அந்திராசி முதலியார் நியமிக்கப்பட்டிருந்தான். குரு பால்தேயஸ் இராசவாசல்முதலியாராக ஒருகிறிஸ்தவன் இருப்பதையே விரும்பினார். அவருக்குப் புவிநாயக முதலியாரின் ஓய்வுபெறும் வேண்டுகோள்சாதகமாக அமைந்தது. அவர் கொமுசாறி வன்கோயனுடன் கலந்து பேசிக்கொண்டார்.

''முதலியாரே, உமது மகன் பூதத்தம்பி உமக்குப்பின் உமது பதவிக்கு வருவதில் தடையில்லை. அந்த உரிமையை நான் மறுக்கவில்லை ஆனால் அவர் உம்மைப்போன்று நிர்வாக அநுபவமுடையவராக இருப்பாரென நினைக்கவில்லை. ஆதலால் இராசவாசல் முதலியார் பதவியை இன்னொருவருக்கு வழங்கநேரிடும்...'' என்றான் வன்கோயன். புவிநாயகமுதலியாரின் முகம் வாடியது. அதனைக் காட்டிக் கொள்ளாமல் சொன்னார்:

''அது உங்கள் விருப்பம், துரை அவர்களே...''

''அவ்வாறாயின் பூதத்தம்பியை நல்லூரின்முதலியாராக நியமிக்கிறேன். இராசவாசல் முதலியாராக யாழ்ப்பாணத்தின் இன்றைய முதலியார் அந்திராசியை நியமிக்கிறேன்...''


சபையில் சலசலப்புஅதிகரித்தது. பலரும் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டார்கள்.

''என்ன சலசலப்பு ...'' என்று வன்கோயன் கேட்டான்.

''யாழ்ப்பாணத்தில் சாதிமுறைகள்தான் சலசலப்பிற்குக் காரணம்...'' என்றார் புவிநாயகமுதலியார். வன்கோயன் வெகு நேர விளக்கத்தின் பின்னர் நிலவரத்தைப் புரிந்து கொண்டான். எனினும் தான் செய்த முடிவை மாற்ற அவன் தயாராகவில்லை.

''இராசவாசல் முதலியாராக அந்திராசி இருப்பார். அவருடன் அவருக்குத் துணையாக பூதத்தம்பியையும் இராசவாசல் முதலியாராக நியமிக்கிறேன்'' [வளரும்]


## நவீன உல்லாசக் குடிசைகள்



### எல்லாம் உங்களுக்காகவே

நீலக்கடல் ஓரத்திலே டாம்பீக முறையில் உங்கள் உள்ளத்திற்கு உவகை தரும் வகையில் உருவாக்கப்பட்ட புதுமையான அனுபவத்தைத் தருவது ஹாபர் வியூ ஹோட்டலேயாகும்.

★ உள்ளூர் உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு எங்கள் பங்களிப்பான ''வார இறுதி விடுமுறை நாட்களை'' அறிமுகப்படுத்துவதில் நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

○ இரு நபர்களுக்கு வெள்ளிக்கிழமை இரவு உணவு முதல், ஞாயிறு மதிய உணவு வரை (உணவு, தங்குமிடவசதி உட்பட) கட்டணம் ரூபா 650/- மட்டுமே.
சனிக்கிழமை BAR - BE - QUE இரவு உணவும்
ஞாயிற்றுக்கிழமை BUFFET மதிய உணவும்

○ சிறுவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

○ கடற்கரையையும், துறைமுகத்தையும் ஒருங்கே நோக்கியவாறு அமைந்துள்ள குளிரூட்டிய அறைகள் உங்களுக்கு இசைவாக அமைந்துள்ளன.

○ உடன் வரும் வாகன சாரதிகளுக்கு இலவச தங்குமிட வசதியும் குறைந்த கட்டணத்தில் உணவு வகைகளும் வழங்கப்படும்.

○ எமது ஹோட்டல் வாசல் வரையுமான பஸ் போக்குவரத்து வசதிகள் உண்டு.

★ **கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியான விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.**

★ **புதுமணத் தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்**

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாசப் பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

## ஹாபர் வியூ ஹோட்டல்

Telegrams: ANCHOR Kankesanturai. Telephone: 22802 JAFFNA
THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH
HARBOUR VIEW HOTEL, KANKESANTHURAI.

# பாடசாலைகளில் சிறுர்களுக்கு சமூக மனிதாபிமானம் உணர்த்தப்பட வேண்டும்

இற்றைக்குத்தொண்ணூறு வருடங்களுக்கு முன்னர் 30-3-1892இல் யாழ். இந்துக் கல்லூரியின் முன்ஞள் அதிபராக இருந்த திரு. நெவின்ஸ் செல்லத்துரை அவர்கள் வழங்கிய ''பண்புகள் பற்றிய தீர்மானம்'' என்ற விரிவுரை ஒன்றில், இளைஞர்கள் மனதில் கடவுள் இருக்கிறுர் என்ற உணர்வையும் அவருக்குப் பெருமதிப்பளிக்க வேண்டிய தன் அவசியத்தையும் மனதில் பதியவைத்தலே முக்கிய அம்சம் என்று விளக்கினுர்

கடவுள் இருக்கிறுர் என்பதற்கு மகாத்மாகாந்தி என்ன எழுதியுள்ளார் என்பதை நான் இங்கு மேற்கோள்காட்ட விரும்புகின்றேன.

## இளஞ் சந்ததியின் கல்விக்கு

## மது தடைகல்லாகிறது

''வரையறுத்துக்கூற முடியாததோர் சக்தியானது நான்உணரும் ஒவ்வொரு பொருளிலும் ஊடுருவிப் பரந்து இருப்பதை நான்கண்ஞல் காணமுடியாவிட்டாலும் கருத்தால் உணருகின்றேன் கண்ஞல் காணமுடியாத இந்தச் சக்தியானது ஐம்புலன்களையும் கடந்த தொன்று என்னைச்சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளும் தொடர்ச்சியாக மாறறமடைந்தும், இறந்தும் போய்க்கொண்டு இருந்தாலும் இம்மாற்றங்களினடிப்படையில் கண்ணுக்குப்புலப்படாத என்றும் மாருத அனைத்தையும் ஒன்றிணைக்கின்ற, உருவாக்குகின்ற புத்துயிர் கொடுக்கின்ற சக்தி ஒன்றை மங்கலாக என்ஞல் உணரமுடிகின்றது. இந்தச் சக்தியே கடவுளாகும் எனது புலன்களால் உணரக்கூடிய அனைத்தும் நிலையற்றதாயினும், அவர் மட்டும் நிலையாக உள்ளார்''.

மகாத்மா காந்தியின் இக்கூற்றைவிட தனிமனிதனின் வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளமையை நாம் அறிந்திருக்கின்ரேமு? அதனையே நாம் ஆருவது புலன் அல்லது தெய்வீக வழிகாட்டல் அல்லது அற்புதங்கள் என்று கூறுகின்ரேம், கடவுளானவர் யாருக்கும் எப்பொழும் அவரது வழிகாட்டல் தேவைப்படும்போது. உதவக் காத்திருக்கிறுர். 'அவர் வழி காட்டுபவர்'- பைபிள் 3-6. ஆனல் தனது மாசுள்ள இதயத்தில் இறைவன்வந்து உறைவார்என்று ஒருவர் எதிர்பார்க்கக்கூடாது. இதுவே எப்பொழுதும் எல்லாகோரிக்கைகளும நிறைவேற்றப்படாததற்குக் காரணமாகும். ஏன் அநேகர் இன்னும் 'கடவுள் எங்கே இருக்கிறுர்; கடவுளைக்காட்டு' என்று கேட்பதில் இருந்தும் இதனை விளக்கலாம்.

கடவுளை ஏற்றுக் கொள்ளும் தன்மையானது அண்மைய இனக்கலவரத்தின்போது (ஜுலை, 1983) வெளிக்கொணரப்பட்டது

அச்சந்தர்ப்பத்தில்வன்செயல்களுக்குட்பட்ட, உதவியற்ற அகதிகளின் அடிமனத்திலிருந்து 'கடவுளே, கடவுளே'; 'யேசுவே, யேசுவே' என்ற ஓலங்கள் கிளம்பின.

### தவறு யாருடையது?

கடவுளை ஏற்றுக்கொள்ளாமை என்பது கடந்த 25-30 ஆண்டுகளாக பெற்ருேரும், ஆசிரியர்களும் தமது கடமையிலிருந்து தவறிவிட்டார்கள் என்பதையே தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது இதன் பலாபலனே, கடந்த 25-30 வருடங்களுக்குமுன்னர் தமிழர்கள் உயர்வாக மதிக்கப்படக்காரணமான ''சிறந்த தமிழ்ப் பண்பாடானது'' முற்ருக மறைந்துவிட்டது.

அண்மைக் காலத்தில் எமது பாடசாலைகளில் அளிக்கப்பட்ட மதக்கல்வியானது எமது சிறுர்களின்மீது எவ்வித தாக்கத்தையும் கொண்டிருக்கவில்லை. மாருக, வகுப்பறைக் கல்வியில் மதச்சடங்குகள், இறைநூல், தத்துவம் ஆகியவற்றில் புலமையை வளர்ப்பதிலேயே கூடியகவனம் செலுத்தப்பட்டதேயன்றி ஒரு தனி மனிதனின் ஒழுகக நேர்மையின் முன்னேற்றமான வளர்ச்சிக்கு மிகக்குறைந்த அளவே அது உதவியுள்ளது. ஒரு மனிதனது உள்ளத் தூய்மையையும், தெய்வீக ஊக்கத்தையும், நன்னடத்தையையும் தூண்டி அவனது ஒழுக்க நேர்மையால் பூரணத்துவத்தை ஏற்படுத்துவதே எல்லாமதங்களினதும் அடிப்படை அம்சமாகும். பொதுவாக மதமானது தனிமனிதனது ஒழுக்கப் பண்பிற்காகவே கற்பிக்கப்படுகின்றது. இது இம்மையிலும் மறுமையிலும் ஒரு தனி மனிதனது பேரின்பப் பேற்றையே கூடியளவிற்குக் கருதுவதாய் அமைந்துள்ளது. அது மட்டுமன்றி, மதத்துடன் தொடர்பான நடவடிக்கைகள், தீய நோக்கோடு சிலரால் மனம் போன போக்கில் நடாத்தப்படுகின்றன அதாவது 'உலகியல் சார்ந்ததாய்' தனிப்பட்டவரின் அபிலாஷைகளுக்காகவும் இறைவனுக்கு லஞ்சம் கொடுப்பதாய்- இது அமைந்துள்ளது. இறுதியாக இங்கு கூறப்பட்டவற்றை இறைவனுக்கு அளிக்கும் மதிப்பாக நாம் கொள்வமுடியாது.

''எவஞெருவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யமுடியாது ஏனெனில் அவன் இருவரில் ஒருவரைப் பகைத்து மற்றவனிடம் அன்பு காட்டுவான், அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனைப் புறக்கணிப்பான். இறைவனுக்கும் திரவியத்திற்கு உன்ஞல் ஊழியஞ் செய்யமுடியாது' - செண். மத்தியூ 6:24.

கடவுளுக்கு அளிக்கப்படும் எமது வழிபாட்டின் சிறந்த நோக்கம் பின்வருமாறு அமையவேண்டும். ''மனிதர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டத்தில் இருக்கின்ற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் பொருட்டு. உங்கள் ஒளி அவர்களுக்கு முன்பாகப பிரகாசிககக் கடவது' - மத்தேயு 5;16.

## இறைவனை எவரும் ஏமாற்றமுடியாது

இறைவனை எவரும் ஏமாற்றமுடியாது என்பதை அவரவர் தமது வாழ்வின் ஆரம்பத்திலேயே உணர்வது மிகச்சிறந்தது. இவ்வித உணர்வானது மதரீதியான சடங்குகளுக்கு இரண்டாம்தர முக்கியத்துவத்தையே கொடுக்கும். ஒரு மனிதனுடை நாளாந்த வாழ்வில் கடவுளுக்கு அவன் அளிக்கும் மகிமைபிரதிலிக்கவேண்டும் விதைத்த அளவே அறுவடை செய்யமுடியும் என்பது கருத்துவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முக்கிய அம்சமாகும் ஒருவன் தான் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்தே ஆகவேண்டும்.

இறைவனுக்கு அளிக்கப்படும் மகிமை சூழ்நிலைக்கேற்ப வேறுபடும். முழு நிறைவான கல்வியறிவுள்ளவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையின் மூலமே கடவுளுக்கான மகிமையை அளித்து வருகிறுர்கள். ஒரு கட்டுப்பாடான வாழ்வானது மிகச்சிறந்த சமூக வாழ்விற்கு உயர்த்திவிடுகின்றது இவ்விதம் ஓர் உத்தம விளைவினை நாம் அடைவதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையானது பின்வருமாறு அமையவேண்டும். நீங்கள் எதைச் செய்தாலும் அதை உங்கள் திறமைகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டித்திறம்படச் செய்வதால் சமூகம் முழுவதினதும் வாழ்க்கை மேம்பாடு என்ற இறுதிக்குறிக்கோளை அடைவதற்ஞப் பங்களிப்புச் செய்தவராவீர்கள் இதுவே சமூக நன்னடத்தையாகும்.

## சமூக மனிதாபிமானம்

முறுத்தலாவை செண். தோமஸ் கல்லூரித்தலைமை ஆசிரியர் திரு பற்றிக் குணவர்த்தனு 1983ம் ஆண்டு பரிபளிப்பு விழா அறிக்கையில் பின்வருமாறு கூறுகின்ருர்:

''எமது பாடசாலைகளில் கற்பிக்கப்படும் மதபோதனைகளில் சமூக மனிதாபிமானம் பற்றிக் குறிப்பிடத்தக்க அளவு வலியுறுத்தப்பட வேண்டும்.''

சமூக மனிதாபிமானம் என்பது தனிப்பட்ட ஒருவரின் மீட்சியை அன்றி சமூகம்முழுவதினதும் மீட்சியை நோககமாகக் கொண்டது.

அரசியல் என்பது அதிகாரத்தைக் கைப்பற்றுவதையும் அதனைச் செயற்படுத்துவதனையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது

பொருளாதாரமானது செல்வத்தைப் பெருக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டது.

ஆகவே எமது பாடசாலைகளில் சமூக மனிதாபிமானத்தின் சரியான பெறுமானங்

## ✶ கலாநிதி டொனல்ட்வொட்சன்

களையும் கருத்துக்களையும் எமது சிறுர்கள் இளமையாக இருக்கும் பொழுதே அவர்களின் பிஞ்சு உள்ளங்களில் பதியவைத்தல் வேண்டும். இப்பருவத்தில்அவர்களது இதயங்கள் திறந்திருப்பதுடன், நாம் கூறுபவற்றை ஏற்கக் கூடியதாகவும் இருக்கும்.

இதுவே பிரச்சினைக்குத் தீர்வு ஆகக்கூடிய திறவுகோலாகும் இது எமது எல்லா ஆசிரியர்களும் ஒன்றுபட்டால் மட்டுமே தாக்கமுடையதாக இருக்கும்.' தற்காலத்தில ஆசிரியர்கள் ஒரு போதனு நிலையத்தில் இருந்து இன்னென்றிற்கு ஓடிச் செல்கிறுர்கள்; எனவே அவர்களால் முழுமையான கல்வியை மாணவர்களுக்கு அளிகக முடியாதுள்ளது' எனப்பேராசிரியர் ஒருவர் என்னிடம் கூறினுர். அவருக்கு நான் பதிலளிக்கையில், அதன் பெறுமதி மறைவாக உள்ளது என்றும், கடந்த 30—50 வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர்களாக இருந்தவர்கள் அடைந்த வெற்றிகளை ஆராய்ந்து பார்க்கும்படியும் கூறினேன். அவர்களில் பலர் வாழ்வில் பல முன்னேற்றங்களைக்

செய்வதற்கு அனுமதிப்பதாகவே உள்ளது.

சமூக ஒழுங்குடமையை வளர்ப்பதைப்பொறுத்த மட்டில் வயது வந்த இளைஞர் யுவதிகளின் எல்லாப் பெற்ருேருடனும், ஆசிரியர்களுக்கும் சமமான பங்குண்டு. ஒரு நல்ல குடும்பமும், ஒரு நல்ல குடும்ப வாழ்வுமே இதற்கு அடிப்படைகளாகும். குடும்ப வாழ்வின் சீர்குலைவிற்கு மதுப்பழக்கமும் ஓர் காரணமாகவுள்ளது இத்தகையவர்களிடம் தமது குடிவகைகளை வாஙகப்பணமிருக்கும் அதே வேளையில் அவர்களின் குழந்தைகளுக்குச் சிறந்த உணவை வாங்கப் போதிய பணமிருப்பதில்லை. மிகவும் சத்துள்ள உணவானது மூளைச் சக்தியை விருத்தியடையச் செய்கின்றது என்ற மிக முக்கியமான அம்சத்தை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே மிகச் சிறந்ததும் முழுமையானதுமான கல்வியை அளிப்பதற்கு இந்த அம்சம் முக்கியமாகக் கணிக்கப்படவேண்டும்.

நன்றி,
'சற்றர்டே றிவியூ'

# 3

- மதிப்பளிக்க வேண்டிய மூன்று.
  முதுமை, மதம், சட்டம்.
- விரும்பவேண்டியமூன்று:
  தூய்மை, நேர்மை, கடின உழைப்பு.
- பாராட்ட வேண்டிய மூன்று:
  அழகு, அறிவு, குணம்.
- வளர்த்துக் கொள்ள வேண்டிய மூன்று:
  அஞ்சாமை, உற்சாகம், திருப்தி.
- காப்பாற்ற வேண்டிய மூன்று:
  செல்வாக்கு, பற்று, நட்பு.
- விலக்கவேண்டிய மூன்று:
  புகைப்பிடித்தல், மது அருந்துதல், சூதாடல்.
- கட்டுப்படுத்த வேண்டிய மூன்று:
  நாக்கு, உணர்ச்சி, இச்சை.
- கவனிக்க வேண்டிய மூன்று:
  பேச்சு, நடத்தை, செயல்
- ஒழிக்கவேண்டிய மூன்று;
  சோம்பல், பொய், புறங் கூறல்.

—சச்சி

கண்டுள்ளார்கள் என்றும், இதைவிடவேறு என்ன வெகுமதி அவர்களுக்கு வேண்டியுள்ளது. என்றும் கேட்டேன் இதனைக்கேட்ட அவர் பதிலளிக்கையில், 'ஆம் டாக்டர் நானும் ஓர் ஆசிரியரின் மகன் தான் என்ற கூறினுர்.

கண்மூடித்தனமாக மரபுகளைப் பின்பற்றுவோரிடையே இறைமகிமையானது மரபுரீதியான மதச்சடங்குகளின் அடிப்படையில் அமைந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் அதிக மெய்ஞானத்தைப் பெறும்போது மதச்சடங்குகள் இரண்டாம் இடத்தைப்பெறும். என்னைப் பொறுத்தமட்டில் கூட அளவுக்கதிகமான மதச்சடங்குகள் அடுத்தடுத்துப் பிழைகளைச்


## நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

✶ தாமதம் ✶ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world at Unbeatable Rates

த பிஞென்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680

# கௌரிசங்கர் ஒரு கலைக்களஞ்சியம்

பாவலர் மா. முத்துசாமி
தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுத் துணைத்தலைவர்

சிற்பகலாநிதி கௌரி சங்கர் ஒரு கலைக்களஞ்சியம் அவர் ஒரு நிறைகுடம். ஆன்றவிந்தடங்கிய கொள் கைச்சான்றோர்! ஆய கலைகள் அறுபத்துநான்கில் பலவற்றில் தேர்ச்சியும் திறமையும் பெற்ற வர்கள் அவர்களின் பரம் பரைக் கலையான சிற்பக்கலை யில் அவருக்கு ஈடு அவரே தான்; சிற்பக்கலையில் ஒருவர் சிறந்து விளங்க நாட்டியக் கலை நாடகக்கலை இசைக் கலை, சோதிடக்கலை, வார்ப் புக்கலை, கட்டிடக்கலை, நிர் மாணக்கலை வரைபடக்கலை, ஒப்பனைக்கலை, மொழிவளம் ஆன்மீக நெறி போன்ற தெய் வாம்சம் மிக்க கலைகளில் அடிப் படை அறிவும், ஆற்றலும் பெற்று இருத்தல்வேண்டும், இத்தனை கலைகளையும் இன்ன பிறவற்றையும்; பன்மொழி களையும், கசடறக்கற்றுத் தேர்ந்த கலை ஞானியாக விளங்குகின்றார் அவர்! உள் ளத்தில் ஒளி உண்டானால் உரையினில் செயலினில் ஒளி உண்டாகும். அத்தகைய உள்ளொளியைப் பெற்றுத் திகழும் ஓங்குபுகழ் பெரியார் அவரது பணிகள் அத்தனையும் சிறக்க அவரது அறிவுத்திறமே காரணம் எனினும் அதற் கெல்லாம் மேலாக ''தற்காத்து தற்கொண்டாற் பேணி தகை சான்ற சொற்காத்துச் சோர் விலாள் பெண்'' என்ற வள் ளுவர் வாக்கின் வடிவமாக விளங்கிவரும் கொண்டவர் குறிப்பறிந்து குடிகாக்கும், அவரது இல்லத்தரசியார். அவர்களின் துணையும் அவ ருக்கு தூண்டா ஒளி விளக் காய்த் திகழ்கிறது என்றால் அதை எவரும் மறுக்க மாட் டார்கள் என்பது திண்ணம்.

காலத்தால் அழிக்கமுடியாத பல கலைச் செல்வங்களை இளமை முதல் இன்றுவரை இந்த செந்தமிழ் நாட்டிற்கும், இந்தியத் தரணிக்கும், இன்ன பிற நாடுகளுக்கும் வழங்கி வரும் வள்ளல் அவர் கலையை தனக்காக அல்லாமல் கலைக் காகவே பயன்படுத்தும் தன் னலமற்றதகைசால் பெரியவர். அவர்தம் கலைச் சிறப்புக்களை யெல்லாம் அத்துறையில் சிறந்து விளங்கும் வல்லுநர் கள் மட்டுமே பல்வேறு கோணங்களில் காட்டமுடியும் காட்டுவர் என்பது திண்ணம்! ''அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய நூல் இன்றிகோட்டி கொளல்'' என்பதை அறிந்த வன் நான் ஆகவே, அவரது கலைச்சிறப்புக்களை கண்டும் கேட்டும் மகிழத்தெரிந்த நான் அவற்றை விண்டு விளம்பும் வல்லமைபெற்றேன் அல்லேன் என்பதோடு, இடத்தின் அருமை கருதியும் இதனை விரித்துரைக்க விரும்பவில்லை!

இன்றைய நாளில் சரக்கின் முறுக்கைவிட, செட்டியின் முறுக்கைவிட. விளம்பர முறுக்கே பொருள்களை விலை போகச் செய்கிறது என்பது நாம் காணுகின்ற உண்மை யாகும். எனவே, அவரது சிறப்புக்களையெல்லாம் ஒல் லும் வகையிலெல்லாம் உல கிற்குக்காட்டி, மேலும் உன் னதமான கலைப் படைப்புக் களை அவர் உருவாக்கித் தர வழிவகுக்க வேண்டியது நம் போன்றோரின் தலையாய கட மையாகும். குடத்திலிட்ட விளக்கைப்போலிருக்கும் அவ ரது சிறப்புக்களைக்' குன்றின் மேலிட்ட தீபமாக ஒழி வீசச் செய்வது நம் ஒவ்வொருவரது பணியாகும்! கலையைப்பற்றிய கவனத்தைத்தவிர பொருள்க ளின் விலையைப்பற்றிய கவலை அவருக்கிருக்கக் கூடாது கலைப் படைப்புக்களைப் பற்றிய கவ னம் அவருக்கு இருக்கவேண் டுமே தவிர காலத்தை எப் படிக் கழிப்பதென்ற கவலை இருக்கக்கூடாது. நாட்டைப் பற்றிய எண்ணம் இருக்க வேண்டுமே தவிர வீட்டைப் பற்றிய எண்ணம் இருக்கக் கூடாது. நாளைக்கு எதைப் படைப்பது என்ற எண்ணம் அவரது உள்ளத்தில் எழவேண் டுமே தவிர எப்படிப் பிழைப் பது என்ற எண்ணம் இருக் கக்கூடாது. இதற்கு நாம் நிரந்தரப் பரிகாரம் காணப் பாடுபடவேண்டும். ஒரு நாள் விழா எடுப்பதாலும், வேறு பல சிறப்புக்களைச் செய்வதா லும் விளையும் பயன், ஒரு சிலநாட்களில் மங்கி மறைந்து விடும் அப்படி அவரது புகழ் மங்காமல், மறையாமல் இருக்க வேண்டிய கடமைகள் ஏரா ளம்! ஏராளம்!!

அவரது பெயரால் அமைப் பினைக் காணுவதும்; அறக்கட் டளைகள் நிறுவுவதும்; விழா எடுப்பதும்; விளம்பரம் தருவ தும் நாட்டுக்குப் பயன்தரும் நற்பணிகள் என்பதில் ஐய மில்லை. எனினும் அந்த நல்ல வர், வல்லவர் இன்னும் பல் லாண்டு வாழ்ந்து பல படைப் புக்களை உருவாக்கி, அந்தத் திறமையான புலமையினை இந்நாட்டாரும்; எந்நாட்டா ரும் அறிய, அனுபவிக்க, பயன்பெறச் செய்ய வேண்டியது நமது கடமை யாகும். அப்படிச் செய்வது அவருக்காக அல்ல. நம் அருந் தமிழ்க் கலைக்காக நாம் ஆற்ற வேண்டிய தொண்டாகும் என பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். மாண்புமிகு புரட் சித் தலைவர் தலைமையில் இயங் கும் நம் அரசும் அவரைப் பயன்படுத்திக் கலை வளர்க்கும், புகழ் பரப்பும், என்பது திண்ணம்!

சிற்ப கலாநிதி கௌரி சங்கர் தபதியாரின் 70ம் ஆண்டுபிறந்தநாள்விழாச் சிறப்புமலரிலிருந்து தொகுத்து உதவியவர்:

பி. எஸ். செட்டியார்

மொத்தத்தில் சிற்பகலாநிதி கௌரி சங்கர்தபதியார் ஒரு கலைக்களஞ்சியம்! அவரையும், அவரது இல்லத்தரசியையும் தந்தையாக, தாயாக ஏற்றுக் கொண்டுள்ள நாம் ''மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்

[11ம் பக்கம் பார்க்க]

ஆர்பிக்கோ

இம்மாதச் சலுகைப் பொருள்

10% விலைக் கழிவு

சாப்பாட்டு மேசைகளும் கதிரைகளும்

உருக்கினாலான சதுர, நீள் சதுர, வட்ட வடிவங்களில், பல்வேறு டிசைன்களில் சாப்பாட்டு மேசைகள். விலைகள் ரூபா 850/- தொடக்கம் ரூபா 2,200/-வரை.

மேற் பகுதி தோலினால் அமைந்த சொகுசு சாப்பாட்டு சுழல் கதிரைகளும், சாய்மனைக் கதிரைகளும் – ரூபா 275/- தொடக்கம் ரூபா 1,500/- வரையிலான விலைகளில்.

யாழ்ப்பாணம்: டிரூன்ஸ் லங்கா மார்க்கட்டிங் லிமிட்., மொடல் மார்க்கட் கட்டிடம்.

மட்டக்களப்பு: ஈஸ்ரேர்ண் ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ், முனை வீதி.

றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்.,

69, ஹைட்பாக் கோணர், கொழும்பு–2

தொலைபேசி: 25705–6

## சொல்லோவியம் - 4

# செருப்பு வாங்கிய காதை

## த.சண்முகசுந்தரம்

முருகபுரம் என்பது அழ கிய அமைதியான கிராமம். இந்தக்கிராமத்தில் பண்டிதர் முருகப்பிள்ளை பரமசிவம் பிறந்தார்; இக்கிராமத்திலே இவர் வளர்ந்தார். கிராமத் துச் சைவப்பிரகாச வித்தியா சாலையில் தமிழை நன்குகற் றார். இவரின் நல்லாசிரியர் பண்டிதர் பழனிப்பிள்ளை. இங்கு இவர் பத்தாம் வகுப்பு வரை கற்றுத்தேறினார்.

பண்டிதர் பழனிப்பிள்ளை, பண்டிதர் பரமசிவத்தின் தூரத்து மாமன்முறையான வர் பண்டிதர் பரமசிவம் இந்தப் பழனிப்பிள்ளையிடம் சனி ஞாயிறு நாட்களில் வீட் டிலே திண்ணைப்பள்ளி முறை யில் பாடம் கேட்டுவந்தார் இதனால் இளம்பரமசிவத்தின் தமிழ் அறிவும் சைவஈடுபாடும் நன்குவளர்ந்தன. ஊரிலே உள்ள ஆங்கிலப்பள்ளியில் இளம் பரமசிவம் இரண்டு ஆண்டுவரை கற்றார். இதனால் இவருக்கு ஆங்கில அறிவும் கிட்டியது அத்துடன் கிரா மத்தில் உள்ள இரத்தினசபா பதிக்குருக்களிடம் வடமொழி யும் கற்றார் இளம்பரமசிவத் தின், சைவ, தமிழ், வடமொழி ஆங்கில அறிவு நன்கு வளர்ந் தன. அது மட்டன்று அவரின் தலைமயிரும்வளர்ந்தது. பெண் கள் பார்த்துப் பெருமைப்படக் கூடிய நீளமானமயிர். இத னைப் பெரிய குடுமியாக அவர் கட்டியிருப்பார். தகப்பனரு டன் சேர்ந்து தோட்டவேலை யிலும் இளம்பரமசிவம் ஈடு பட்டார் தாய்க்குந் தனிமகன் பரமசிவம். இதனால் சொந்த வீடு, வளவு, வயல், தோட் டம் எல்லாம் பரமசிவத் திற்கே உரித்தாகும்.

தந்தையார் முருகுப்பிள்ளை யும் தாயார்வள்ளியம்மையும், நல்லாசான் பழனிப்பிள்ளையும் சேர்ந்து கேட்டுக்கொண்ட தன் பெயரில் இளம்பரமசிவம் பழனிப்பிள்ளையின் ஏகபுத் திரியைத் திருமணம் செய்து கொண்டார். திருமணமாகி அடுத்த ஆண்டிலே ஆசிரியர் கலாசாலையிலே மூன்று ஆண்டு களாகப்படித்துப் பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியரானார். அத்துடன் பண்டிதர் தேர்வி விலும் தேறிவிட்டார். தான் படித்த முருகபுரம் சைவப்பிர காச வித்தியாசாலையில் ஆசிரிய ராகப் பணியேற்றவர் ஏற்ற வர்தான் கடந்த முப்பத் தைந்து ஆண்டுகளாக அங்கு பணிபுரிகின்றார். இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண்குழந்தையும் பரமசிவம் தம்பதிகளுக்கு உளர் இந்த மூவரும் ஆசிரியர்கள் மூவருக் கும் திருமணமாகிவிட்டது மூவரும் ஒரேவளவில் வெவ் வேறு வீடுகட்டி வாழ்ந்து வரு கின்றனர். இந்த நான்கு குடும் பத்தினரும் முருகபுரம் கந்த புராணகலாசாரத்தில் ஊறிப் போனவர்கள்.

பண்டிதர் பரமசிவம் முன் னர் காந்திய இயக்கத்தைச் சேர்ந்து கதர்ஆடை அணிந்து வந்தார். இப்போது கைத் தறி ஆடைகளை மட்டும் உடுப் பார். நெற்றியிலே எந்நேர மும் திருநீறு சந்தனம் திக ழும், ஆசிரியர் கலாசாலையில் சேரும்போது விருப்பமில்லா மலே குடுமியை வெட்டிவிட் டார். இதுவே இவருக்குப் பெரும் துக்கத்தையும் துன் பத்தையும் கொடுத்தது. பட்டம், படிப்பு, பொருள் எல்லாம் இருந்தும் பண்டிதர் பரமசிவம் உலகியல் அறிவில் லாதவர். உயர்ந்த நோக்கத் திற்காக வாழ்பவர்.




பண்டிதர் பரமசிவம் ஒரு நாள் இறப்பர்செருப்பு ஒரு சோடியை வாங்கிவந்தார். மாட்டுத்தோல் செருப்பை அணிவதில்லை. கொல்லப் பட்ட ஆவின்தோல் குற்ற முடையது என்பது பண்டிதர் பரமசிவத்தின் கருத்து. ஆகவே இறப்பர்ச் செருப்பை அணிவார் இல்லாவிட்டால் வெறுங் காலுடன் திரிவார்.

''அம்மா! ஐயா ஏனம்மா கிணற்றடிக்குப் போனார்? திரும்பி வரவில்லை. தலைச் சுற்று விழுந்து போனாலும் போயிருப்பார்', என்று பரம சிவத்தின் மகன் குரல்கொடுத் தான் தாயும் மகளும் விரை ந்து சென்றனர் அங்கே பண் டிதர் பரமசிவம் சவர்க்காரத் தைப் போட்டுத் தேங்காய்த் தும்பால் செருப்பைத்தேய்த் துக்கழுவிக் கொண்டிருந்தார்.

''முருகா! எண்ணும்எழுத்தும் கண்ணெனத்தகும் வெற்றி வேலா சரணம்! முருகா துணை! எழுத்தறிவித்தவன் இறை வன் ஆகும் காலம் போற போக்கு... செருப்பிலே இப் படி விலை எழுத்து எல்லாம் பொறிக்கின்றனர். எண்ணை யும் எழுத்தையும் எப்படி என் காலிலே மிதித்துக் கொண்டு நடப்பேன். நல்லா கத்தேய்த்துக்கழுவிய பின்னர் இந்தச் செருப்பைக்காலிலே மாட்டினால் தவறு இல்லை. முருகா! சரணம்! குருவே துணை!''

தாய்க்கும் மகளுக்கும் இவையாவும் நன்கு கேட்டு விட்டன ஒருபுறம் சிரிப்பும் ஒருபுறம் அழுகையும் வந்தன. இறுதியில் மனைவி பண்டிதர் பரமசிவத்தைப் பார்த்துக் கைஎடுத்துக்கும்பிட்டார்.

''நீங்கள் எழும்புங்கள். நான் கழுவித் தருவேன்'' என்றார்.

''ஐயாவின் உயர்ந்த நோக் குக் குழந்தைப்பிள்ளைத்தன மானது ஏன் பேய்ப்போக்கு எனவும் கூறலாம் இருந்தும் இந்த நோக்கிலே எமது விளக் கத்திற்கு எட்டாத ஏதோ ஒரு பொருள் புதைந்திருக்கின் றது'' என்றாள் மகள்.

[11ம் பக்கம் பார்க்க]

# எமது சிறுகதை




காற்று வீசிக்கொண்டிருக்கிறது. 'பெற்றோமக்ஸ்' வெளிச்சம் மங்குவதும் பிரகாசமாக மாறுவதுமாக இருக்கிறது. அந்தச் சிறிய வெளியில் மக்கள் கூடி இருக்கிறார்கள்.

'அவள் ஒருத்தி தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறாள்.

''மதில் சுவர்களில் எழுதி இருப்பதை நீங்கள் வாசித்திருப்பீர்கள். நிச்சயம் வாசித்திருப்பீர்கள் மிகவும் கேவலமான வார்த்தைகளில் என்னைப்பற்றியும், என் அம்மாவைப்பற்றியும் அவைகளில் எழுதி இருக்கிறார்கள், அந்த வார்த்தைகளை அப்படியே இங்கு நான் சொல்லமுடியாது. ஆனால் சாராம்சத்தில் நடத்தை கெட்டவளின் மகள் என்றும், தாயைப் போலவே பிள்ளை என்றும், இப்படியானவள் சமூகத்தில் பணிசெய்வதை இந்தக் கிராம மக்கள் எதிர்க்கவேணும் என்றும், நாட்டைவிட்டே துரத்த வேணும் என்றும் காணப்படுகிறது அல்லவா? இதற்காகவே நான் உங்கள் முன்வந்திருக்கிறேன்.

''ஒரு பெண்ணின் கதையை அறிவதென்றால் மிகவும் விருப்பமாக இருக்கும். அதிலும் அவளின் காதல் வாழ்க்கையைப் பற்றிய கதையை கேட்பதென்றால் இன்னும் ருசியாக இருக்கும். இதற்கும் மேலாக பல ஆண்களுடன் வாழ்ந்த பெண்ணின் கதையைக் கேட்பதென்றால் மிக மிகச்சுவையாக இருக்கும். இது எனக்குத்தெரியும்.

இத்தகைய சம்பவங்களை எதிர்பார்த்து உங்கள் உடல் ஊனத் தசைகளுக்குப் பரவச இன்ப உணர்ச்சியை ஊட்டுவதனை மட்டும் தயவு செய்து செய்யாதீர்கள் உங்கள் முன் மதப்பிரசங்கி போல நான் இருக்கவிரும்பவில்லை.

நான் பேச வந்ததைச்சொல்வதற்கு என்னை அனுமதியுங்கள்.

'நடத்தை கெட்டவள்' என்று சுவர்களில் கிறுக்கி எழுதி இருக்கிறார்களே, அப்படி எழுதியவர்கள்யார் என்று எனக்கு உண்மையில் தெரியாது. அவர்கள் யார் என்று அறியவும் நான்முற்படவில்லை. அவர்களுக்கு இதனை எழுதக்கூடிய யோக்கியம் இருக்கிறதா என்பதனைக்கூட நான் உங்களைப் பார்த்துக்கேட்கப் போவதில்லை. நான் கேட்பது இதுதான்-

'நடத்தை கெட்டவள்' இப்படி எழுதியவர்கள் ஆண்களா? அல்லது பெண்களா? என்பது தான். நிச்சயம் பெண்கள் அல்ல. இது உண்மைதானே?

''நடத்தை கெட்டவள் என்று மட்டுமே நாம்வாழுகிற சமூகத்தில் குறிப்பிடுகிறார்கள் ஆம், பெண்களைப் பற்றியே குறிப்பிடுகிறார்கள். 'நடத்தை கெட்டவள்' என்ற நிலைக்கு ஒரு பெண் ஆகிவிட்டால், அதற்குக்காரணமாக இருக்கிற ஆண் நடத்தை கெட்டவனுகத்தானே இருக்கமுடியும் ஆனால் அவனை 'நடத்தை கெட்டவன்' என்று சமூகம் சொல்லி ஒதுக்கக்காணவில்லையே ஏன்?

''இங்கு கூடி இருப்பவர்களில் ஒருசிலர் கூச்சல்போடுவதும், விசில் அடிப்பதும் எனக்குக்கேட்கிறது. ஆனால்,

''நான் உங்கள் மத்தியில். கூடுதலாக பெண்கள் மத்தியில் சமூகப்பணிகளைச் செய்து வருகிறவள்: பெண்களின் விடுதலைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசாரம் செய்கிறவள், செயற்படுகிறவள். என்னை நீங்கள் அதிகமாக விரும்புகிறீர்கள் எனக்குப் பசித்தநேரங்களில் உங்கள் உணவையே உண்ண எனக்குத் தருகிறீர்கள். உடைகளைக் கூடத்தருகிறீர்கள் நான் உங்கள் குடிசைகளில் இரவுநேரங்களில் களைத்துப்போன பின் தூங்க அனுமதிக்கிறீர்கள் என்னைப் பிடித்து இருட்டுக் குகைகளில் அடைத்து விடவேண்டும் என்று துடிப்பவர்கள் என்னைத் தேடி வரும் சமயங்களில் மறைத்து வைக்கிறீர்கள். 'தெரியாது' என்று அருமையாக நடித்து சொல்கிறீர்கள். இதற்கெலாம் நன்றி.

''எனது உள்ளத்திலே எண்ணங்களை எனக்காக வென்று மட்டும் உருவாக்கிச் சுயநல நோக்குடன் செயல்படுத்த நினைத்திருந்தால் என்னால் இன்று நிறையச் சம்பளம் பெறும் உத்தியோகத்தில் இருந்திருக்க முடியும் ஓரளவு ஆடம்பரமான வாழ்வு வாழ்ந்திருக்கமுடியும். ஆனால் நான் அப்படிச்செய்யவில்லை ஆம், நானும் பட்டப்படிப்பு படித்தவள்தான். இது உங்களுக்கே தெரியும். இதற்காகத் தான் எனக்கு மதிப்புத் தருகிறீர்களோ தெரியவில்லை.

''ஆனால் 'பட்டங்கள்' பெற்றுவிடுகிற எல்லார் மீதும் எனக்கு நல்லெண்ணமில்லை. பல்கலைக்கழகத்திலே நான் படிக்கும்போது அங்கு இடம்பெறும் 'காதல்', 'போராட்டங்கள்' பற்றி எனக்கு முற்றுமுழுதான நல்ல அபிப்பிராயம் நிலவியது உண்டு. பின்பு அப்படி இருக்கவில்லை 'கதவுகளுக்குள்' தான் என்ற முடிவு, பல சம்பவங்கள் மனதில் பதிந்ததால் எனக்கு ஏற்பட்டது.

''மீண்டும்'விசில்' அடிக்கும் சத்தம் கேட்கிறது. முதலிலே 'விசில்' அடித்துக் கூச்சல் இட்டதற்கும் இப்போ 'விசில்' அடிப்பதற்கும் உள்ள வித்தியாசமும் எனக்கு விளங்குகிறது

''பெற்றோமக்ஸ் வெளிச்சம் இப்போதும் மங்கியும் பிரகாசமாகவும் மாறி மாறி ஒளிவிடுகிறது. அவள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறாள்.

''தயவுசெய்து எனக்கு குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் தாருங்கள்...

......... .........

''ஏன் என் கண்கள் கலங்குகின்றன என்று கேட்கிறீர்கள்? தண்ணீர் குடித்ததினால் இப்போதிருந்ததாகத்தைச் தீர்த்துக்கொண்டேனே அதனால் தான்.

''எனது 'தாய்' இறக்கின்ற கடைசி நேரத்தில் என்னிடம் தண்ணீர் கேட்டாள் நான் மூக்குப்பேணியில் வார்த்துக் கொடுத்தேன். அவள் சொன்னாள். தாகத்தைத் தீர்த்துக் கொண்டேன் என்று அந்த வார்த்தைகள் சரியாக உச்சரிக்கபபடவில்லைத்தான் ஆனாலும் அப்படித்தான் சொன்னாள். பின்பு இடைக்கிடை உதடுகள் மட்டும் அசைந்தன. சிறித நேரத்தின்பின் இறந்து விட்டாள்.

''அவள் உயிருடன் இருக்கும்போது எனக்குப் பல விஷயங்களைச் சொன்னாள். கதைகள் பல சொன்னாள்.

''எனது தாய் மூன்று தடவைகள் மணம் செய்தவள். மூன்று கணவன் மாரும் இல்லாத நிலையில் இறுதிக் காலத்தில் தனியாக வாழ்ந்தவள். என்னைப்பெண்கள் கல்லூரி ஒன்றின் விடுதியில் சேர்த்துப்படிக்க வைத்தவள். அம்மா வாடகை வீட்டிலே குடிஇருந்தாள். ஒவ்வோர் ஞாயிற்றுக்கிழமைகளிலும் என்னை வந்துபார்ப்பாள். வரும்போது வெறுங்கையுடன் வரமாட்டாள். தின்பதற்கு ஏதாவது வாங்கியே வருவாள் விடுமுறை காலத்தில் மட்டும் என்னைத் தன்னுடன் அழைத்துப்போவாள்.

''ஓரளவு எனது குடும்ப நிலையை நான் உணரத் தொடங்கிய போதுதான் என்னுள் வெறுப்புணர்ச்சிகள் சிறிது சிறிதாகத்தலை தூக்கின. அம்மாவைப்பற்றிச்சில கதைகள் என்காதில் விழத்தொடங்கியபோது அதாவது விளங்கிக் கொள்ள முடிந்த போதுதான் நான் இப்படிக் கலக்கத்துக்குள்ளானேன் ஆயினும் அன்புடன் என்னை வளர்க்கும் அம்மாவைப்பார்த்து என் காதுகளில் அவளைப்பற்றி விழுகிற செய்திகளை அவளிடம் கேட்க எனக்கு விருப்பமில்லை. ஒருவித பயமும் இருந்தது. ஆனால் இனிமேல் கேட்காமல் இருக்கமுடியாது. என்ற நிலை எனக்கு ஏற்பட்டபோதுதான் துணிந்து கேட்டேன்.

அம்மா தான் படிப்பிக்கிற பாடசாலை ஆசிரியர் ஒருவருடன் சுற்றுத்திரிகிறாள் என்பதே அது.

''அவள் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தபடி மிகவும் சாதாரணமாக இதற்குப்பதில் சொன்னாள்:

'நீயும் ஒருநாளைக்கு என்னிடம் இப்படிக்கேட்பாய் என்று எதிர்பார்த்தேன். இன்று கேட்டுவிட்டாய் மிகவும் நல்லது. உனக்கு வாழ்க்கை உண்மைகளை, அனுபவத்தில் நான் கண்டவற்றைச் சொல்ல வேண்டும், உன் வாழ்க்கைக்கு அது உதவவேண்டும் என்பதற்காகக் காத்திருந்தேன். அந்த மாஸ்டருடன் நான் ஏன் சுற்றித்திரிகிறேன் என்று கேட்டாயே! இந்தக்கேள்வி நான் மூன்று கணவன்மாரைக் கலந்து கொண்ட ஒரு பெண்ணாகவாழ்ந்தவள் என்பதால் என்னை நீ இப்படிக்கேட்க இந்தச் சமூகம் தூண்டியுள்ளது எந்தப்பெண்ணைத்தான் இந்தச்சமூகம் நல்ல கண்கொண்டு பார்க்கிறது?

தனது மனைவியைஒவ்வொரு கணவனும் கற்புக்கரசி என்பான். ஆனால் இதே கணவன்மார் ஒன்று சேர்ந்து விட்டாலோ அக்கூட்டத்தில் சேராதிருக்கும் இன்னொரு கணவனின் மனைவியைப்பற்றி நாக்கு நீட்டி மிகவும் சுவையாக விமர்சனம் செய்வார்கள்....

''அம்மா எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தபடி இருந்து தொடர்ந்து சொன்னாள். மிகவும் சாதாரணமாகச்சொன்னாள்.

நான் உனக்கு என் முதல் கணவனைப்பற்றி... அதாவது உன் தகப்பனாரைப்பற்றி முதலில் சொல்லவேண்டும். அவர் ஒரு 'பணப்பேய்', நான் உழைக்கிற பெண்ணாக இருந்தும் கூட அவர் சீதனமாக எவ்வளவைப் பெறமுடியுமோ அவ்வளவையும் என்பெற்றோர்களிடமிருந்து கறந்த பின்பே என்னை மணம் முடிக்கச்சம்மதித்தார். அப்போதெல்லாம் இதுபற்றி நான் அதிகம் கவலைப்படவில்லையாயினும் நாளடைவில் அவர் ஒரு பணப்பேய் என்பதனைக்கண்டு மனம் நொந்தேன். நான் சம்பளம் எடுத்து வந்ததும் அப்படியே வாங்கி விடுவார். பலமுறை பணத்தை எண்ணிப்பார்ப்பார் வீட்டுச்செலவுக்குக் கணக்குப்பார்த்தே தருவார். சாப்பாட்டுக்கு ஏன் இவ்வளவு செலவு என்பார் நல்ல துணி வாங்கவிடமாட்டார். உன்னை நான் வயிற்றில் சுமந்து கொண்டிருந்த வேளையில் ஆசைக்கென்று ஒரு பண்டத்தைத்தானும் சாப்பிட எனக்கு முடியவில்லை தனது பெயரிலேயே வங்கியில் பணத்தைப் போட்டு வைத்தார், இந்த மாதிரியான விஷயங்கள் எனக்கு அவர் மேல் சிறிது சிறிதாக வெறுப்பை ஏற்படுத்தியது......

உனக்கு இரண்டு வயது இருக்கும் உன் தம்பி பிறந்து ஆறுவது மாசம். அவனுக்குக் கடுமையான காய்ச்சல் அப்போ மழை காலம். அவனை ஆசுபத்திரிக்குக் கொண்டு போக'கார்' பிடியுங்கோஎன்று கெஞ்சினேன். அவர் சொன்னார். ஆசுபத்திரி கிட்டத் தானே வா நடந்து போவோம் என்று ஆசுப்பத்திரி வார்ட்டில் அவனை அனுமதித்தார்கள். ஆனால் உன் தம்பி இறந்துவிட்டான். அவனை இடுகாட்டுக்குத் தூக்கிச் சென்ற சமயம் நீயும் அழுதாய். ஞாபகம் இருக்கிறதா?

நான் உன் தகப்பனை அன்றே முற்றாக வெறுத்தேன். ''பணம்'' வாழ்வதற்கு. வாழ்வது பணத்துக்காக அல்ல. எனவே என்னுடன் ஒட்டி இருந்த பணப்பேயை விரட்ட எண்ணினேன். இதன் முடிவு உன் தகப்பனை நான் விவாகரத்துச் செய்ய வேண்டி ஏற்பட்டது.'

''ஒரு அத்தியாயத்தை அம்மா சொல்லிமுடித்தாள். மாஸ்டருடன் சுற்றுவதுபற்றி நான் எதுவுமே பின்பு கேட்கவில்லை.

பெற்றோமக்ஸ் வெளிச்சம் முன்பு போலவே எரிந்து கொண்டிருக்கிறது. அவள் ஒருத்தி சொல்லிக்கொண்டிருக்கிறாள்:

''இதன்பின்பு அம்மா இரண்டாவது கணவனை எப்படிக்கட்டிக்கொண்டாள் என்பது பற்றி ஒருநாள் இப்படிச் சொன்னாள்.

'அவர் சிறந்த எழுத்தாளனாக இருந்தார் சமூக சீர்திருத்தக்கருத்துக்களைத் தனதுஇலக்கிய வாயிலாகச் சமூகத்துக்கு தருபவராக இருந்தார் அவரின் கதைகளை, கட்டுரைகளை நான் விரும்பி வாசிப்பேன். அவரின் ஒரு நாவல் என்னை மிகவும் கவர்ந்தது. விதவையாக வாழும் பெண் ஒருத்திக்கு மறுவாழ்வு கொடுக்கும் ஓர் இளைஞனைப் பற்றியது அது. இந்த விருப்பத்துக்கு நானும் விதவையாக இருந்தது காரணமாகலாம். எனக்கு அப்போது வயது இருபத்தைந்து கூட ஆகவில்லை. நான் அந்தநாவலை வாசித்ததும் அதை எழுதியவரை நேரில் கண்டுபேசவிரும்பினேன். ஒருநாள் அச்சந்தர்ப்பம் கிடைத்தது.

இலக்கியக் கூட்டமொன்றின் அந்தச் சந்திப்பில் அவருக்கு என்னை மிகவும் பிடித்து விட்டது. என் நிலவரங்களை மிகவும் கவனத்துடன் கேட்டார் நாவலே எழுதமுடியும்

[14ம் பக்கம் பார்க்க]

## செருப்பு வாங்கிய

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

''உந்த மனிதனோடு முப்பது வருடக் குடித்தனம் நடத்திவிட்டேன் இன்னும் நான் இந்த மனிதனைச் சரியாக விளங்கவில்லை' என்றார் பண்டிதரின் மனைவி.

(யாவும் கற்பனை)

## கௌரிசங்கர்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல'' என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ற வகையில் செயல்பட்டு அவர்களைச் சீரும் சிறப்புமாக வாழவைப்போமாக!

வாழ்க அப்பெரியார்; வாழ்க அவர் தம்துணைவியார்! வளர்க அவர் தம் கலைப்பணி! வெல்க நம் அறப்பணி-இத்திருப்பணி!


வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

# யாழ்ப்பாணத்தில் ★ ★ ★
# பாரிய மருந்துக்களஞ்சியம்.

- ✯ உள்நாட்டு வெளிநாட்டு மருந்துவகைகள் இறக்குமதியாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், விநியோகஸ்தர்கள்,
- ✯ வைத்திய உபகரணங்கள்.
- ✯ பாலுணவுப் பொருட்கள்.
- ✯ தகரத்திலடைக்கப்பட்ட உணவுவகைகள்.

அனைத்துக்கும் . . . . . . . . . . .

## மொத்த சில்லறை வியாபாரிகள்

பின்வரும் உற்பத்திப் பொருட்களுக்கு
நாமே வடபிராந்திய விற்பனையாளர்கள்.

- ★ பைசர் லிமிட்டெட். ... ... ... ... (PFIZER LTD)
- ★ அரச மருந்துக் கூட்டுஸ்தாபனம் ... (STATE PHARMACEUTICALS CORPORATION)
- ★ சிலோன் நியுறிசனல் Fபூட்ஸ் லிமிட்டெட். ... (CEYLON NUTRITIONAL FOODS LTD.)
- ★ ஹேஸ்ட் (சிலோன்) லிமிட்டெட். ... ... (HOECHST CEYLON CO., LTD.)
- ★ லங்கா மில்க் பூட்ஸ் (சி. டபிள்யு. ஈ.) லிமிட்டெட். ... (LANKA MILK FOODS LTD.)
- ★ மல்லர் அன் பிப்ஸ் (சிலோன்) லிமிட்டெட். ... (MULLER AND PHIPPS CEYLON LTD.)
- ★ வயத் இன்ரநாஷனல் லிமிட்டெட். ... ... (WYETH INTERNATIONAL LTD.)
- ★ சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட். ... ... (CEYLON COLD STORES)
- ★ வெல்கம் Fபவுண்டேசன் லிமிட்டெட். ... ... (WELCOME FOUNDATION LTD.)

## உணவுக்கு சுவையூட்டும் மரக்கறி எண்ணெய்
## VEGETABLE OIL




அளவு மீறிய உழைப்பு
அல்லது
துன்பத்திற்கு பிறகு
மீண்டும் உடல்நலம் பெறுவதை
துரிதப்படுத்துவதற்கு

## பிராண்ட்ஸ்
## கோழி எஸன்ஸ்
(Brand's Essence of Chicken)




என்பவற்றை நாமே இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறோம்.

கொஞ்சும் குழந்தை முதல் வயதுவந்தோர் அனைவரும் விரும்பிச் சுவைக்கும் **பிறிமா பாண் (PRIMA BREAD)**
யாழ்ப்பாணத்தில் எம்மிடம் கிடைக்கிறது.

# சிற்றி மெடிக்கல்ஸ்

487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24191, 24192.

# CITY MEDICALS
Phone: 24191–92. JAFFNA.

கிளை ஸ்தாபனம்:
செறில்ஸ் CHERRYL'S
436, 438, 440, பிரதானவீதி,
யாழ்ப்பாணம். போன்: 24194.

# ஊனமுற்றவர்களின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா மனித ஜீவனிடமும் அன்னை யேசுவைக்காண்கின்றார். "நான் எனக்குள்ளேயே சொல்லிக்கொள்வேன், 'இது பசியுடனிருக்கும் யேசு. அவருக்குநான் உணவளிக்கவேண்டும். இது சுகவீனமுற்றிருக்கும் யேசு, இவரை நான் கழுவி பராமரிக்கவேண்டும். நான் யேசுவை நேசிப்பதால் இவருக்குப் பணிவிடை செய்கிறேன் என்பதாக"

## சர்வதேச சங்கம்

அன்னை திரேசாவின் பணிகள் பல்வேறு நாடுகளிலுமுள்ள பல்வேறு இளைஞர்களைக்கவர்ந்தது. இதன் மூலமாக அன்னைதிரேசாவின் சக ஊழியர்களின் சர்வதேச சங்கம் உருவாயிற்று.

ஏழ்மையிலிருப்பவர்களில் கடவுளைக் காண்பது, ஏழைகளுக்குப் பணிபுரிவதன் மூலமும் கருணையுடன் செயல்படுவதன் மூலமும்இறைவனை நேசிப்பது. பிரார்த்தனையின் மூலமும் தியாகத்தின் மூலமும் கருணை மடங்களை ஒன்றிணைப்பது. பல்வேறு நாடுகளுக்கிடையிலும் உதவிகளைவளர்ப்பது, குடும்ப உணர்வை நிலைபெறச்செய்வது ஆகியவை இந்த சர்வதேசசங்கத்தின் நோக்கங்களாகும்.

"'நேசிக்கப்படாதவர்களை நேசிப்பேன்; கைவிடப்பட்டவர்களுக்கு உறைவிடமும், பராமரிப்பும் அளிப்பேன்' என்பது அன்னை திரேசாவின் அமர லட்சியமாகும்."

## தேடுவாரற்றவர்களின்

## தெய்வம்

தேடுவாரற்றவர்களின் தெய்வமாகக் கருதப்படும் அன்னை திரேசாவை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திஇரக்கத்தின் உயிர்என்று அழைத்தார்.

அன்னை திரேசா கைவிடப்பட்டு இறந்து கொண்டிருப்பவர்களுக்காகவே பெரிதும் பணியாற்ற விரும்புகின்றார். "சமூகத்தில் தேடுவாரற்றுக் கிடப்பதுவே மிகமோசமான நோயாகும் என்பதை நான் உணர்ந்து வருகின்றேன் தொழுநோய்க்கு இப்போதெல்லாம் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது தொழுநோய் குணப்படுத்தக்கூடியதே. சயரோகத்துக்கும் சிகிச்சையுண்டு. அதைக்குணப்படுத்தமுடியும். சகலவிதமான நோய்களுக்கும் மருந்திருக்கிறது. ஆனல் தேடுவாரற்றுக் கிடப்பது என்பது பணிபுரிவதற்குக் கைகளும் அன்பு செலுத்துவதற்கு இதயமும் இல்லாத வரையில் இந்தப் பயங்கர நோயைக் குணப்படுத்த முடியும் என்று நான் கருதவில்லை"

இவ்வாறு பத்திரிகைப் பேட்டியொன்றில் அன்னை தெரிவித்திருக்கிறார்.

இறந்துகொண்டிருக்கும் கை விடப்பட்டவர்களுக்கென இல்லம் ஒன்றை கல்கத்தாவில் அன்னை திரேசா நிர்மாணிப்பதற்குக் காரணமாய் இருந்த தமது வாழ்க்கையில் மிகவும் உணர்ச்சிகரமான ஒரு நிகழ்ச்சியைப் பற்றி அவர் கூறுகிறார்.

## முதற் சந்தர்ப்பம்

1952ம் ஆண்டு ஒருநாள் கல்கத்தா நகரில் நடந்து சென்று கொண்டிருந்தபொழுது ஆஸ்பத்திரியின் முன்னல் ஒரு மனிதன் எலிகளாலும் எறும்புகளாலும் கடித்துத் தின்ற நிலையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டேன். அந்த மனிதனை நான் என்னுடன் எடுத்துச் சென்றேன். கைவிடப்பட்டு, வெறுக்கப்பட்டு, மிகவும் வேதனையான நிலையில் கிடந்த உயிருள்ள ஒரு ஜீவனுடன் அதி நெருக்கமாகப் பழகும் சந்தர்ப்பம் அன்றுதான் கிடைத்தது. என்னைப் பொறுத்தவரை அவன் யேசுவாகவே காட்சி தந்தான். ஏனென்றல் அவரே கூறியிருக்கின்றார் "நான் வீடின்றி இருந்தேன், நான் நோயாளியாய் இருந்தேன் என்னை நீ ஏற்றுக்கொண்டாய்" என்று.

அந்த இல்லத்தில் இருப்பவர்கள் எவரும் வேண்டப்படாதவராக விரக்தியுற்றவராக உணவு கிடைக்காதவராக அன்புசெலுத்தப்படாதவராக இறந்ததில்லை என்கிறார் அன்னை திரேசா. தங்கள் நம்பிக்கைக்கேற்ப அவர்கள் கேட்பன நாங்கள் வழங்குவோம். சிலர் கங்கா தீர்த்தம் கேட்பர், சிலர் புனிதநீரைக் கேட்பர். சிலர் தம்முடன் சிலவற்றைப் பேசும்படி கேட்பர். சிலர் தமக்காக ஜெபம் செய்யச் சொல்வர். இன்னும் சிலர் தமது பக்கத்தில் யாராவது சும்மா அமர்ந்திருக்க விரும்புவர். நாம் அவர் அமைதியாக இறைவனுடன் சேர்வதற்காகச் சகலதையும் செய்வோம். ஏனென்றல்அமைதியாக இறைவனிடம் சேர்வது தான் மனிதனின் மிகப்பெரிய தேவை"

## குழந்தைகள்

## இல்லம்

அன்னை ஆரம்பித்த சிசுபவன் எனும் குழந்தைகளுக்கான இல்லம் நாடு முழுவதும் தோன்ற ஆரம்பித்தது. இளம்பிள்ளைவாதம் அல்லது வேறு நோய்களால் அசக்தர்களாககிவிட்ட பிள்ளைகள், மூளைக் கோளாறு அல்லது அனுதைகளாகக் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு இது அடைக்கலமாக அமைகின்றது.

1957ல் தொழுநோயாளர்களுக்கான ஒரு இல்லத்தை அன்னை கல்கத்தாவில் ஆரம்பித்தார் இருக்க இடமின்றி திரிந்துகொண்டிருந்த 5 பேர் முதலில் அங்கு இடம் பெற்றார்கள் இதன்பின் தொழுநோயாளர்களுக்கென்றே சாந்திநகர் என்ற பெயரில் சிறு நகரையே உருவாக்கினார். அன்னை.

தமது பணிகளின் நிமித்தம் அன்னை திரேசாவிஸ்தாரமாகப் பிரயாணங்கள் மேற்கொண்டுள்ளார்.

1965ல் வெனசுவேலாவில் ஒரு நிலையத்தை அன்னை ஆரம்பித்தார் 1967ல் இலங்கையில் ஒரு நிலையத்தை திறந்துவைத்தார். ரோமில் 1968லும் 1969ல் ஆஸ்திரேலியா விலும் ஜோர்டானில் 1970லும், வியட்னும், லிமே.பேரு ஆகிய இடங்களில் 1977ம் ஆண்டிலும் சிசிலி, நியுகினியில் 1977லும் இல்லங்களை ஆரம்பித்தார்.

அன்னையின் பணிகள் மின்னெளிபோல் துரிதமாகவும் பிரகாசமாகவும் அபிவிருத்தியடைந்து உலக அங்கீகாரத்தைப் பெற்றன. அதன் மூலம் பல்வேறு பரிசுகளும் வந்து குவிந்தன-

## பத்மஸ்ரீ விருது

1962ம் ஆண்டு இந்திய அரசு அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவித்தது, இந்த விருது வழங்கும் வைபவம் குறித்து திருமதி விஜயலக்சுமி பண்டிட் பின்வருமாறு கூறினர்.

சாறி உடுத்திய அந்த கன்னியாஸ்திரி - எளிமையின் உருவமாய் - வண்ணமிகும் ராஷ்டிரபதி பவன் தர்பார்மண்டபத்தினுள் வந்தபோது அங்கு திடீர் அமைதி நிலவியது. ஒரு நோய்வாய்ப்பட்ட குழந்தையை அல்லது செத்துக்கொண்டிருக்கும் மனிதனை ஏற்றுக்கொள்வதைப்போன்று அந்தவிருதை அவர் பெற்றுக்கொண்டார். அதைவிட அத வேறு ஒன்றும் பெரிதாகப்படவில்லை அவருக்கு."

அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவருக்கு மாக்ஸஸே விருது வழங்கப்பட்டது 1971ம் ஆண்டு பாப்பரசர் 23-வது ஜோன் ஞாபகார்த்த பரிசினை பாப்பரசர் 6-வது போல் அவர் அவர்களிடமிருந்து பெற்றார் சகோதரத்துவத்தின் தெய்வம் என்றும் அமைதியின் தூதுவர் என்றும் பாப்பரசர் அன்னையைப் பாராட்டினர் 1971 செப்டம்பரில் நல்ல சமாரிதன் விருது அவருக்குக் கிடைத்தது. அதே ஆண்டு அக்டோபரில் ஜோன் எஃப் கென்னடி சர்வதேச விருது கிடைத்தது.

வாஷிங்டனிலுள்ள அமெரிக்க கத்தோலிக்க பல்கலைக்கழகம் மனிதாபிமானத்துக்கான டாக்டர் பட்டம் வழங்கியது.

சர்வதேசப் பரிவுணர்வுக்கான ஜவஹர்லால்நேரு விருது 1972 நவம்பர் 15ம் திகதி வழங்கப்பட்டது. 1973ஆம் ஆண்டு டெம்பிஸ்டன் மன்றப்பரிசு வழங்கப்பட்டது.

## மிக உயர்ந்த

## விருது

1979ம் ஆண்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்ய விருதொன்றை ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அன்னைக்கு வழங்கினர். அதே ஆண்டு நோபல்பரிசு வழங்கப்பட்டது 1980 பாரத ரத்ன விருது இந்தியஅரசால் வழங்கப்பட்டது. இந்தியாவில் மிக உயர்ந்த விருது இதுவாகும்

1983, பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியின் விருது வழங்கப்பட்டது. மதிப்பார்ந்த இவ் விருது பெற்றுள்ள பிரிட்டிஷார் அல்லாத நால்வரில் ஒருவராவர். அன்னை, டாக்டர் அல்பர்ட் சுவட்சர், முன்னள் அமெரிக்க அதிபர் டுவைட் டி. ஈஸனேவர், இந்திய முன்னள் ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஏனைய மூவருமாவர்.

பட்டங்களும் விருதுகளும் அவருக்கு பெரிதாகத்தோற்றுவதில்லை, முன்னள் இந்திய ஜனதிபதி' திரு. வி வி. கிரி கூறியவாறு, அவர் ஒரு பெண் தெய்வம்' கிறிஸ்தவ அன்பினைச் செயலில் காட்டுபவர், அவரது மனிதத்துவமானது உயர்ந்த சமயத்துக்கு ஒப்பானது"

---

சிங்கத்தின் காலில்மட்டுமல்ல, சிங்கத்தின் வாலிலும் நகம் இருக்கிறது. சிங்கத்தின் வாலிலே இருக்கும் மயிர்க்கற்றையை விலக்கிப் பார்த்தால் இந்த நகம் தெரியும் யாருக்கு இருக்கு தைரியம். —ராணி

---

(A)

ஒன்று முதல 999வரை ஆங்கிலத்தில் எண்ணிக் கொண்டுபோனல் இந்தக் 999ல் ஒருதரம்கூட 'A' என்கிற எழுத்துவராது.

— 'சச்சி'

---

## பண்பின் துயரம்

அழகுக் கிளிதான் கூண்டில் கிடந்தே
அது தினமும் துயர் அடைகிறது
அண்டங் காக்கை அதற்கெது துயரம்
ஆகாயத்தில் பறக்கிறது!
பழகச்சிறந்த பண்புள்ள பசுதான்
பட்டியில் கிடந்தே உழல்கிறது.
பார்ப்போர் வெறுக்கும் பன்றிதன் பாட்டில்
பாரில் உலவித் திரிகிறது.

மனமாய்ப் பிறர்க்கே மங்கலம் அருளும்
மஞ்சள் தான்தினம் தேய்கிறது
மண்ணில் கிடக்கும் புல்லின் கிழங்கு
மகிழ்வுடன் தனக்குள் சுகிக்கிறது
உணவாய் உதவும் சுவைமிகு கனிகள்
ஒவ்வொரு நாளும் மடிகிறது
உதவிகள் புரியா நச்சுக்கனிகள்
உச்சிமரத்தில் களிக்கிறது

மணக்கும் ரோஜா மங்கையர் தலையில்
மனத்துய ரோடே வாடுகுது
மணம்குணம் கிடையாப் புல்லின் மலர்கள்
மாலையின் வரையில் சிரிக்கிறது
இணக்கம் அறிந்தே இசையுடன் வாழும்
இன்குணம் கொண்டோர் வாடுகிறார்
இங்கிதம் தெரியா இழிகுணத்தோர்கள்
ஏனே சுகமாய் வாழுகிறார்!

கோப்பாய் எஸ். சிவம்

---

# சிறுகதை

(14ம் பக்கத் தொடர்ச்சி)

தைப்பற்றியும், மக்கள்வாழ்வு பற்றியும் நிறைய மிகவும் சரியாகச் சொல்லித்தருவார். அவர் சொல்லும், செயலும் அவர் வாழ்வில் ஒன்றுகவே இருந்தது.

அவர் நெஞ்சு வலியால் இறந்தார். இயற்கையாகவே மரணம் எய்தினர் என்றுதான் நீ நினைத்துக்கொண்டிருக்கிறய். ஆனல் அவரின் மரணம் திட்டமிடப்பட்ட கொலை என்று நான்சொன்னல் நீ ஆச்சரியப்படக்கூடும். ஆனல் இது உண்மை.

"அம்மாவின்கண்களில் கண்ணீர் நிரம்பி வழிகிறது. நான் அவளைப் பார்த்தபடியே இருக்கிறேன். சிறிது நேரத்தின் பின்பு சாதாரண நிலைக்குத் தன்னைக் கொண்டுவந்தவளாக மேலும் தொடர்ந்து அம்மா சொன்னள் —

அவளின் மனஉறுதியை, மனதிலே இருக்கும் ஆயிரம் எண்ணங்களை நான் நினைத்துக் கொள்கிறேன்.

'அவருடன் நான் இரண்டு வருடங்கள்தான். ஆனல் இந்த இரண்டு வருடங்களின பின்பும் நான் வாழ்ந்திருக்கிறேன். பெண்கள் சமூக நலத்துக்காக என்னைப் பொதுப்பணியில் ஈடுபடுத்தினேன். அதனல் எனக்கு நல்ல பல நண்பர்கள் - ஆண்களும்தான் - இருக்கிறர்கள். நீ என்னிடம் கேட்டியே அந்த 'மாஸ்டர்' பற்றி, அவர் எனது சிறந்த நண்பர். சமூகத்தை ஆராய்ந்து வைத்திருப்பவர்'

"நான் எனது பாடசாலைப் படிப்பை முடித்துப் பல்கலைக் கழகத்தில் பயின்றுகொண்டிருந்த காலத்தில் அம்மா தனது ஆசிரியர் தொழிலில் நின்று தானகவே ஓய்வுபெற்றுவிட்டாள். சமூக சேவையில் தாராளமாக ஈடுபட்டாள்.

அடிக்கடி எனக்குப் பெண்களைப்பற்றியும், மக்கள்வாழ்வு பற்றியும் தனது ஆணித்தரமான கருத்துக்களைக்கூறுவாள். அவை என் மனத்தைத் தொட்டன. பல்கலைக்கழகத்திலே எல்லோருக்கும் தெரிந்த ஒருத்தியாகவிளங்கியதற்கு அம்மாவே காரணமாவாள், சமூக சேவையில் படிக்கும்போதும், பட்டம் பெற்ற பின்பும் நான் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறேன். பட்டம் பெற்றதும் உத்தியோகம் பார்க்கவேண்டும் என்ற எண்ணமே எனக்கு எழவில்லை. அம்மா சொல்லுவாள், உத்தியோகம் பார்த்தால் நீ ஒரு பெண்தான் சீவிக்கிறய்; சமூகப்பணியில் ஈடுபட்டால்நீயும், பிறரும் சீவிக்க முனைகிறீர்கள் என்று

"அம்மா உயிருடன் இருந்தபோதும், அவள் எண்ணங்களாலும், சமுதாயச்சிந்தனைச் சுமைகளாலும் நசுங்கிப்படுக்கைகளில் கிடந்தபோதும் எனக்குக் கூறுவது 'உன் சமூகத்துக்காக உழை என்பது தான்.

"அவள் இறக்கும்போது சொன்னளே தாகம் தீர்ந்து விட்டது' என்று, அது எனது சமூகப்பணியில் அவள் கொண்ட நம்பிக்கைதான் அச்சொல்லாகப் பிறந்தது.

"அதனை நான் இழக்கப் போவதில்லை. உங்கள் முன் நான் நிற்கத்தான்போகிறேன்....."

'பெற்றேமக்ஸ்' வெளிச்சம் முன்புபோல அல்லாது பிரகாசமாக எரிகிறது.

'அவள் ஒருத்தி' சொல்லிக் கொண்டே இருக்கிறள்'

(யாவும் கற்பனையே)

அமெரிக்கா ✯ கனடா ✯ ஜேர்மனி
✯ பிரான்ஸ் ✯ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகழுங்குல ஒதுகளுக்ம் நாடுங்கள்!

AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS

99–2/56 B கபூர் பில்டிங்,
2–வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# சிறுகதை

[11ம் பக்கத் தொடர்ச்சி]

என்றூர். இதன் பின்பு அடிக்கடி என்னைச்சந்திப்பார். இப்படிச் சந்திக்கும் பல சந்தர்ப்பங்களில் நமது எழுத்தாளர்கள் எழுதுவது ஒன்று செய்வது வேறொன்று; ஆனால் நான் அப்படியல்ல,என்று அடிக்கடி கூறுவார். எமது சந்திப்புக்கள் இறுதியில் திடீரெனக் கல்யாணத்தில் முடிந்தது. அப்போதுதான் நான் உன்னை மாணவர் விடுதியில் சேர்த்தேன். நீ அப்போது மூன்றும் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தாய்.

அவர் மிகவும் நல்லவர். பணம் என்பதற்கு அவர்மதிப்பே கொடுப்பதில்லை இப்படியான வரையும் நான்வெறுத்து விவாகரத்து ஏன் செய்தேன் என யோசிக்கிறயா? அவர் ஒரு சந்தேகப் பிராணியாக இருந்ததே அவருடன் நான் வாழ முடியாமல் போனதற்குக் காரணமாகும்.

அவர் ஒரு இளைஞனாக இருந்தும் விதவையான என்னை அதிலும் ஒரு பிள்ளையுடன் கூடிய தாயான என்னை மணம் முடித்திருந்தது அவர் மீது எனக்கு மிகுந்த பாசத்தை யூட்டியது.

எழுத்தாளர்கள் ஓரளவுகற்பனையையூட்டுவதால்தான் அழகிய இலக்கியத்தைஉருவாக்குகிறார்கள். இதேபோல வாழ்க்கையின் உண்மை நிலைக்கும் கற்பனையூட்டி விபரீதகற்பனையூட்டிப் பார்க்க முனையும் பொது அவர்கள் தவறுசெய்து விடுகிறார்கள் என்று நினைக்கிறேன். இதனையே உன் சிறிய தகப்பனாரும் செய்தார். அவர் என்னைச் சந்தேகித்தார் நானோ முதலில் கணவனைத் துரத்தியவள். எனவே அவரின் சந்தேகம் என்மீது பலமாக வீழ்ந்திருந்தது.

''ஆரம்பத்தில் இலக்கியக் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்லும் அவர் பின்பு அங்கெல்லாம் என்னைக் கூட்டிச் செல்ல மறுத்தார். அவரைக் காண எத்தனையோ இலக்கிய நண்பர்கள் அடிக்கடி வீட்டுக்கு வருவார்கள். அப்போதெல்லாம் என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பார. ஆனால் என்மீது அவர் சந்தேகம் கொள்ள ஆரம்பித்தது முதல் அதனை நிறுத்தி விட்டார். வெளியே சென்றுவிட்டு வீட்டுக்கு வந்ததும், யாரும் நண்பர்கள் தேடிவந்தார்களா? தேநீர் கொடுத்தாயா? ஏன் இங்கு நான் வருமட்டும் தங்கிஇருக்கச்சொல்லி இருக்கலாமே என்று கேட்பவர், காலபபோக்கில் யார் வந்தது என்று தொனி மாற்றிக்கேட்கத்தொடங்கினார்.

'அப்படி யாராவது ஒருவர் வந்தார் என்று நான் கூறினால் போதும், அன்று தேநீர் குடிக்கும்போதோ அல்லது சாப்பிடும்போதோ சீனிகாணாது, உப்புக்கூடிப்போச்சு என்று ஏதாவது சாட்டுக்கூறி அடிக்கவும் செய்தார். இது தொடர்கதையாக முடிவு இல்லாது நீண்டது. உன் 'சகோதரம்' ஒன்று கூட வயிற்றிலேயே இதனால் அழியவேண்டி ஏற்பட்டது.

அவரும் நிறைய வாசித்தவர். உலக விபரங்கள் தெரிந்தவர். நானும்எவ்வளவோமனம் விட்டுச் சொல்லிப் பார்த்தேன். ஒருநாள் அல்ல பல நாட்கள் சொன்னேன். பெண்கள் விடுதலை பற்றி நிரம்ப எழுதுகிறீர்கள; ஆனால் நீங்களும் பழைய ஊறிப்போன சமூகச் சேற்றிலிருந்து முழுமையாக வெளிவராதவராகவே இருக்கிறீர்கள என்று உறைக்கும் படியாகச் சொன்னேன். அதற்கு அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்த கோப்பையை வீசி எறிந்துவிட்டு' செத்தவன் [illegible] பெண்டிலைக் கட்டினாலும் விட்டவன் பெண்டிலைக் கட்டக் கூடாது என்று ஒரே அடியாக அடித்து நொறுக்கினார்.

வாழ்க்கை எனக்குவெறுத்து விட்டது. தற்கொலை செய்யலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால் உன் நினைவு என்னைத்தடுத்தது, உன்னையும உன்போன்ற பிள்ளைகளையும் நினைத்தேன். கையில் கிடைத்த துணிமணிகளுடன் என் எழுத்தாளக் கணவனை விட்டு வெளியேறிவிட்டேன்.

பெற்றோ மக்ஸ் வெளிச்சம் காற்றுக்கு கூடியும் குறைந்தும் இருதரப்புக்கும் மாறிமாறி ஒளிவீசுகின்றது. அவள்ஒருத்தி தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறாள்.

''இதன் பின்பு மற்றொரு நாள் அம்மா தனது மூனறாவது கணவரைப்பற்றி கூறினாள்—

'நான் எனது மூன்றாவது கணவரைத்தேடிப்பிடித்தேன். ஆம் தேடியேதான் பிடித்தேன். நானாகவே அவரிடம் என்னை மணம்முடிக்கும்படி வேண்டினேன். ஏன்தெரியுமா?

நான் இன்னமும் ஆசாபாசங்களை இழநதுவிட்டவள் அல்ல. இது ஒரு காரணம். ஏன் என்னால் குடும்ப வாழ்க்கையில் கணவனுடன் சேர்ந்து வாழ முடியாமல் உள்ளது என்ற கேள்விக்கு பதில்காண விரும்பியது மற்றக்காரணம்.

எனது மூன்றுவது கணவன் சமூகசேவையாளன. எங்கு அநியாயம் நிகழ்கிறதோ அங்கு அவர் தலையே முதலில் தெரியும். பொதுமக்கள் அவரைநேசித்தனர். நான் அவரை எனது முன்னைய கணவன்மாரைவிட அதிகமாக விரும்பினேன். திருமணம்செய்யாமல் இருந்து பொதுமக்களுக்காகத்தன்னை அர்ப்பணிக்க இருந்தாராம். அவரை நான் முதலில் சந்தித்தது பொதுக் கிணறு ஒன்றிலே நஞ்சு ஊற்றப்பெற்றதினால் அக்கிணற்று நீரைக்குடித்த அக்கிராம ஏழை மக்களில் நால்வர் இறந்தார்களே, அன்றுதான். அங்கு இவர் ஓடிஆடி சகல காரியங்களையும் பார்த்துக்கொண்டிருந்தார். எல்லோரும் இவரை 'நண்பர்' என்றே அழைத்தனர,

'சுற்றத்தார், சமூகம் ஆதரவுதராத நிலையில் பெண் ஒருத்தி தனியான வாழ்க்கையை வாழும்காலம் பூராவும் நடத்துவது என்பது இச் சமூக வாழ்வில் முடியாததே. உடல் ரீதியான ஆசைகளுக்காக நான் எனது முதலிரு கணவர் மார்களையும் நிராகரித்தவள் அல்ல. அந்த மாதிரியான எண்ணங்களும் எனக்கில்லை. நிம்மதியான நிம்மதி தரும் ஆணுடன் - கணவனுடன் வாழ்வு நடாத்தவே அலைபவளாயிருந்தேன். நான் விரும்பியது அடிமைத்தனமற்ற பெண்ணாகக் குடும்பம் நடத்தவே.

''சமூக சேவையாளர் என் மனப்போராட்டங்களில் பங்கு கொண்டார். நல்ல நண்பராக பெற்றேன் அவரை. என் அன்பைக்கொடுத்தேன். முடிவில் என்னைவிட்டுவிலக முடியாதவராக அவர் நிலை ஏற்பட்டபோது என் வேண்டுதலுக்குத் தன் பூரண சம்மதத்துடன் என்னை மணம் முடித்தார். நாம் மணம் முடித்துக்கொண்டோம்.

'நீ இப்போதும் மாணவர் விடுதியிலேயே இருந்து படித்துகொண்டிருந்தாய். நான் ஆசிரியர் தொழில் மட்டுமே செய்து கொண்டிருக்கிறேன் என்றே நீ நினைத்துக்கொண்டிருந்தாய். ஆனால் நானும் அவரும் சமூக வேலைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தோம். எனக்கு அவர் சமூகத்

[13ம் பக்கம் பார்க்க]


திங்கட்கிழமைகளில் ரூபவாஹினி - இரவு 7.45க்கு
செவ்வாய்க்கிழமைகளில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை - இரவு 7.00க்கு



ரேகா
செப்டெம்பர் 3 முதல்

வாராந்தம் ரூ.15,000/= ரொக்கப் பரிசு

நெஸ்பிறே
பருகி வெற்றி பெறுங்கள்

**நெஸ்பிறே வெற்றியாளர் போட்டி**

நெஸ்பிறே பக்கெட்டின் பின்புறம் பாருங்கள். உலகப் படம் ஒன்றையும் ஆறுநாடுகளில் நெஸ்பிறே அருந்தும் ஆறு பிள்ளைகளின் வர்ணப் படங்களையும் காண்பீர்கள்.

பிள்ளைகளுக்குரிய நாடுகளைச் சரியாகத் தெரிந்து பக்கெட்டின் பின்புறத்திலேயே உள்ள விடைக் கூண்டை நிரப்பி அனுப்புங்கள்.

போட்டி விபரங்களும் கூப்பனும் பக்கெட்டின் பின்புறத்தில்

**வாராந்தம் மூன்று பேருக்குத் தலா ரூ. 5000-**

இப்போட்டிக்கான சகல விபரங்களும் நெஸ்பிறே பக்கெட்டின் பின்புறத்தில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாரமும் சரியான விடைகளை அனுப்புவோரில் மூவருக்குத் தலா ரூ 5000/- பரிசாக வழங்கப்படும்.

வெற்றிபெறுவோரின் பெயர்கள் 'ரேகா' தொலைக்காட்சி நிகழ்ச்சியிலும் பத்திரிகைகளிலும் அறிவிக்கப்படும். செப்ரெம்பர் 3க்கும் நவம்பர் 19க்கும் இடையே இந்தப் போட்டி நடத்தப்படும். தாமதியாமல் உங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்.

**நீங்கள் பல முறை பரிசு பெறலாம்**

விரையுங்கள்! இன்றே ஒரு பக்கெட் நெஸ்பிறே வாங்குங்கள், மீண்டும் மீண்டும் வாங்கிப் போட்டியில் வெற்றி பெறும் வாய்ப்பை அதிகரியுங்கள். வாராந்தம் ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். ஒவ்வொரு முறையும் நெஸ்பிறே பக்கெட்டின் பின்புறமுள்ள விடைக்கூண்டையே பயன்படுத்த வேண்டும். நெஸ்பிறே அருந்துவோர் சுலபமாக வெற்றிகாண்பர்




400 கிராம் ரூ.24.90

நெஸ்பிறே
வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்லே வழங்கும் பால்

Grant K & E 5497




சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் தாய்மார்கள் அரச அதிபரிடம் செல்வதையும் அரச அதிபரிடம் கதறியழுதபடி முறையிடுவதையும் படங்களில் காணலாம். படம்: தேவா


**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**சாந்தி** [யாழ் நகர்]
10-30, 2-30, 4-45, 700
Michael caine David Warner in
THE ISLAND
action packed
adults only

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6,30
25—27
HAUNTED HOUSE OF HORROR
(Adults only)

**ஹரன்** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார்
**பல்லாண்டு வாழ்க**
(புத்தம் புதிய பிரதி-கலர்)

**ராணி** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30 6-30
எம் ஜி. ஆர். -தேவிகா
**ஆனந்த ஜோதி**

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
**மனோகரா**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30 6-15,
ரவிச்சந்திரன் ராஜஸ்ரீ
**உத்தரவின்றி உள்ளே வா**

**லிடோ** யாழ் நகர்
தினசரி 10-30, . 2-30 6-30,
ஜெய்சங்கர்
ஸ்ரீதேவி
**முடிசூடா மன்னன்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-30
நாகேஷ் - ரவிச்சந்திரன்
**எங்களுக்கும் காலம் வரும்**
[புதிய பிரதி]

**வின்சர்** (யாழ் நகர்)
27-8-84 வரை
தினசரி 10-30. 2-00, 4-30
EAGLE'S WING
A BATTLE FOR SURVIVAL
உயிர் வாழ்வதற்கு உரிமைப் போராட்டம் திகிலூட்டும் வியக்கத்தக்க காட்சிகள் நிறைந்த சித்திரம்


# அகஸ்தியரின் 35 ஆண்டுகால இலக்கியப்பணி

முப்பத்தைந்து ஆண்டு காலமாக இலட்சியத்துடன் இலக்கியப்பணி செய்து வரும் எஸ். அகஸ்தியருக்கு இம் மாதம் 29 ஆம் திகதி ஐம்பத்தொன்பது வயது ஆரம்பமாகிறது.

இலக்கியமே மூச்சென வாழும் இவரது இலக்கிய சாதனைகள் ஈழத்தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட வேண்டியவை.

360 சிறுகதைகள்,
8 குறுநாவல்கள்,
40 வானொலி, மேடை நாடகங்கள்,
45 உலக இயக்கத்தலைவர்களின் வாழ்க்கைச்சம்பவக்கதைகள், 100 தத்துவ சித்தாந்த விமர்சனக் கட்டுரைகள்
70 உருவகக் குட்டிக்கதைகள்
50 உரை நடைச்சித்திரங்கள்.
102 உணர்வூற்றுச்சித்திரங்கள் - இன்றுவரை தான் படைத்த சிருஷ்டிகள் பற்றி இப்படி ஒரு புள்ளி விபரம் ஒன்றை வைத்திருக்கிறார் அகஸ்தியர்.

இலங்கையிலிருந்து அன்றிலிருந்து இன்று வரை வெளிவரும் சகல பத்திரிகை சஞ்சிகைகளிலும் எழுதியுள்ள இவர் தமிழகத்து எழுத்து தாமரை, கண்ணதாசன், தீபம், கலைமகள் ஜீவா போன்ற பல சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார்.

'தாமரை' அகஸ்தியரின் படத்தை 1970ல் முகப்பட்டையாக வெளியிட்டது! 1982ல் 'மல்லிகை' இவரது படத்தை அட்டையில் போட்டது.

இவரது சிறுகதை, நாவல்களுக்கு பரிசுகளும்கிடைத்துள்ளன. 'ஈழநாடு' வாரமலரில் வெளியான 'எரிகோளும்' என்ற இவரது பரிசு நாவல், 'எரி நெருப்பில் இடைபாதை இல்லை' என்ற தலைப்புடன் தமிழ் நாட்டில் என். சி. பி. ஏச் வெளியீடாக வந்துள்ளது.

1961ல் தினகரனில் 'சவுந்தரி' என்ற இவரது குறுநாவலை கவிஞர் கண்ணதாசன நடத்திய 'கண்ணதாசன்' இதழ் மறுபிரசுரம் செய்தது.

இவரது ஆறுநாவல்கள் இதுவரை வெளியாகியுள்ளன. அவை: 'இருளினுள்ளே' (குறுநாவல்)' நீ (உணர்வூற்றுருவகச்சித்திரம்) 'திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கிறாள்' (நாவல்), மண்ணில் தெரியுதொரு தோற்றம் (நாவல்), நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் யோசெப்பு லேக யுலக வரலாறு, எரிநெருப்பில் இடைபாதையில்லை.

அண்மையில் இவரது இரண்டு நூல்களுக்குச்சாகித்திய மண்டலப்பரிசு கிடைத்தது. ஆனாலும் அந்தப் பரிசுகள் இவருக்கு இதுவரை வந்து சேரவில்லையாம்.

இருபது சிறு கதைகள் கொண்ட இவரது சிறுகதைத் தொகுப்பு ஒன்று பூபாலசிங்கம் வெளியீடாக வரவுள்ளது. 'கோபுரங்கள் சரிகின்றன' என்ற மற்றொரு நாவல் ரஜனி வெளியீடாக விரைவில் வெளிவரும்.

அடுத்த ஆண்டு மணிவிழாக் காணும் அகஸ்தியருக்கு நமது இதயபூர்வமான 'அட்வான்ஸ்' வாழ்த்துக்கள்!

# இலக்கிய உலகு

ஈ.கே.ஆர்

## மலையகத்தில்

### வித்திக்குமணிவிழா

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு தலவாக்கொல்லை ஆசிரியபயிற்சிக்கலாசாலை மணிவிழாவெடுத்துக் கௌரவிக்கவுள்ளது. பேராசிரியருடைய மலைநாட்டு மாணவர்களும், ஆசிரியகலாசாலை மாணவர்களும் இதனைப் பெருவிழாவாக எடுக்கவுள்ளனர் விழாவின்போது பிரதம விருந்தினராக அமைச்சர் சௌ. தொண்டமான் கலந்து துணைவேந்தருக்கு பொன்னுடை போர்த்திக் கௌரவிப்பார். அதற்கு ய ஏற்பாடுகளை தலவாக்கொல்லை ஆசிரியகலா சாலை அதிபர் கவிஞர் [illegible] செ. சுந்தரம்பிள்ளை [illegible] வருகிறார்.

## ரஜனி

### மாதஇதழ்

மாதம் ஒரு நாவலை வெளியிட்டுவரும் 'ரஜனி' சஞ்சிகை ஆகஸ்ட் இதழில், பிரபல, எழுத்தாளர் கே டானியலின் பூமரங்கள், என்ற கதையைத் தாங்கிவந்திருக்கிறது! மூவர்ண முகப்புடன் வெளிவந்திருக்கும் இந்த நாவல் 'ரஜனி,க்கு மூன்றுவது குழந்தை ஆனாலும், இந்த நாவல் அமைப்பில் முழு நிறைவானதாக அமைந்துள்ளது. 'ரமணி'யின் ஓவியம் 'டானியல்' கதைக்கு உயிரூட்டுகிறது. தமிழ் நாட்டில் மாதம் ஒருநாவல் பலபத்திரிகை நிறுவனங்கள் வெளியிட்டு வருகின்றன. ஆனால் இலங்கையில் மாதம் ஒரு நாவலை வெளியிடும் சஞ்சிகையாக 'ரஜனி' ஒன்றே தொடர்ந்துவந்து கொண்டிருப்பதனைக்குறிப்பிடவேண்டும். பத்திரிகையாளர்எஸ். குஹநாதன் தனியனாக நின்று மேற்கொள்ளும் இந்தமுயற்சியை ஒரு சாதனையென்று கூடச்சொல்லலாம்.

## சிவகுமாரன்

### கதைகள்

கே. எஸ் சிவகுமாரனின் சிறுகதைத் தொகுதியொன்று வெளிவந்திருக்கிறது. கைதேர்ந்த விமர்சகர்எனப் பலரது அபிமானத்தையும் பெற்ற இவர் ஆரம்பகாலத்தில் எழுதிய சில சிறுகதைகள் சிவகுமாரன் கதைகள், என்ற இத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. ஈழத்துப் பூராடனார் என்ற க தா. செல்வராசகே பால் நூலாக்கியுள்ளார் அமெரிக்கத்தூதரகத்தின் தகவல் பகுதியில் பணியாற்றும் கே. எஸ். சிவகுமாரன், ''முதிரா இளைஞனாக''த்தான் இருந்தபோது இக்கதைகளை எழுதியதாகத்தன் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். அடக்கமாக இருந்து அமைதியாக இலக்கியப்பணியாற்றும் சிவகுமாரன், ஆங்கில இலக்கியப் பரிச்சியம் இருப்பதனால், இவரது எழுத்துக்களுக்குக் கற்றவர்கள் மத்தியில் ஒரு தனிமதிப்புண்டு. கே. எஸ். சிவகுமாரன், 21, முருகன் பிளேஸ், கொழும்பு- 6 என்ற முகவரியில் இந்த நூலைப்பெறலாம்.

# யாருடையது

கோப்பாய்தெற்கைச்சேர்ந்த திருமதி இராசம்மா தேவதாசன் என்பவரின் அடையாள அட்டையை திரு. க. புவனராஜனும், ஓட்டுமடத்தைச் சேர்ந்த செல்வன் சிவசக்திவேல் திருக் கதீஸ்வரன் என்பவரின் அடையாள அட்டையை திரு. நா கோபால கிருஷ்ணனும். வல்வெட்டித்துறையைச்சேர்ந்த திரு. சிவனடியார் மார்க்கண்டேயர் என்பவரின் அடையாள அட்டையை திரு எஸ். சுப்பிரமணியமும், மாதகல் மேற்கைச்சேர்ந்த திரு. இராசதுரை பாலகிருஷ்ணன் என்பவரின் அடையாள அட்டையை திரு எஸ் ராஜனும், தேதுகலை கலுபஹன தோட்டம் செல்வன் ஆலமுத்து சங்கரலிங்கத்தின் அடையாள அட்டையை விசுவமடு றெட்பானா நிலையத்தினரும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

# றிச்சர்ட் பேர்ட்டன்

அண்மையில் காலமான பிரபல ஹொலிவூட் நடிகர் றிச்சர்ட் பேர்ட்டன் ஒரு கரிச்சுரங்கத் தொழிலாளியின் மகன் என்பது பலருக்குத் தெரியாது.

இவரது தாய் மதுபானக் கடையில் விற்பனையாளராகச் கடமையாற்றி வந்தார்.

பேர்ட்டன் தனது முயற்சியினால் திறமையான ஒரு அபூர்வ ஆங்கில நடிகரானார்.

இவரது குரலை இவரது நண்பரொருவர் மணி ஓசையைப் போல் ஒலிக்கும் எனப் புகழ்ந்துள்ளார்.

பல ஷேக்ஸ்பியர் நாடகங்களை மிக்க திறமையுடன் நடித்து ரசிகர்களை மெய்மறக்கச்செய்த பேர்ட்டன், இவ்வித திறமையினால் பிரபல ஹொலிவூட் நடிகை எலிசபெத் டெய்லரையும் கவர்ந்திழுத்தார்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய தமது ஆசிரியரின் மீது இவர் கொண்டிருந்த அளவற்ற பற்றுக் காரணமாக பேர்ட்டன் என்ற அவரது பெயரைத் தமது பெயருடன் இணைத்துக்கொண்டார். இறுதி வரை இந்தப் பெயருடனேயே வாழ்ந்தார்.


— கணேஷ்

# இயந்திரப்படகு மோட்டார் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - மண்முனையில் சேவையிலீடுபட்டிருந்த அரச பெருந்தெருக்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான இயந்திரப்படகின் பெறுமதி வாய்ந்த மோட்டார் இயந்திரம் நேற்று முன்தினமிரவு பன்னிரண்டு மணியளவில் உழவுயந்திரத்தில் வந்தமூன்று இனம் தெரியா இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இளைஞர்கள் அங்கே கடமையிலீடுபட்டிருந்த காவலாளியை ஆயுதங்காட்டி பயமுறுத்தி இயந்திரத்தை கொள்ளையடித்ததாகக் கூறப்படுகிறது மட்டக்களப்பு பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கைதுசெய்த தமது பிள்ளைகளை விடுதலை செய்யும்படி கோரி மகஜர் ஒன்றை யாழ். அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிப்பதற்கு தாய்மார் யாழ். செயலகத்தை நோக்கி அமைதியாக ஊர்வலமாகச் செல்கின்றனர். படம்: தேவா

# இந்திய விமானக் கடத்தல் 'நாடகம்' தொடர்கிறது!

[புதுடில்லி]

நேற்றுமுன்தினம் சண்டிகாரிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட இந்தியன் ஏயர் லைன்ஸ் விமானம் எரிபொருள் நிரப்புவதற்காக டுபாயில் தரித்து நின்றதாகத் தெரிய வருகிறது.

இந்த விமானத்தில் கடத்திச் செல்லப்பட்ட பயணிகள் விமானச் சிப்பந்திகளை விடுவிப்பதற்காக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

டுபாயில் எரிபொருள் நிரப்பிக்கொண்டு அமெரிக்கா செல்வதே கடத்தல்காரர்களின் நோக்கமெனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விமானத்தில் கடத்திச் செல்லப்பட்ட பயணிகள் குறித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

பயணிகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து செய்யப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விமானத்தில் 80 பயணிகளும், 6 விமானச் சிப்பந்திகளுமே உள்ளனர்.

## அரசியல்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர்களான திரு.எஸ்.தொண்டமான், திரு. எஸ். இராசதுரை மற்றும் எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மகஜரை அனுப்பி வைத்த யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி எஸ். பாலசுப்பிரமணியம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியான திருமதி சிறிமாவோபண்டாரநாயக்காவையும் நேரில் சந்தித்து வடபகுதி நிலைமைகளை விளக்கிக் கூறியதுடன் மகஜரின்பிரதிஒன்றையும் கையளித்ததாகத் தெரிவித்தார்.

''வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளில் பெற்றோர்களினல் கையளிக்கப்பட்டுள்ள பிள்ளைகளை அளிக்கப்பட்ட வாக்குறுதியையும் மீறி கண்காணுத தூரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதால் அப் பெற்றோர் விபரிக்க முடியாத கவலையடைந்துள்ளதால் உடனடியாக அப்பிள்ளைகளை விடுதலை செய்யவேண்டும். அத்துடன் நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் கைது செய்த இளைஞர்களை விடுவிக்கவேண்டும் என்றும் அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 மே 18ல் கந்தர்மடத்திலும், ஜூலையில் 24,25,26, 27ம் திகதிகளில் யாழ் மாவட்டம் 1984 மார்ச் சுன்னுகம், ஏப்ரல் 9,10,11,12 திகதிகளில் மற்றும் பகுதிகள், ஆகஸ்ட் 4 வல்வெட்டித்துறை, ஆகஸ்ட் 11 சுன்னுகம் ஆகஸ்ட் 13 கைதடி ஆகிய பகுதிகளிலும் மற்றும் மன்னர், திருகோணமலை, வவனியா ஆகிய பகுதிகளிலும் இடம்பெற்ற சம்பவங்களினல் கொலை செய்யப்பட்டோர், காயமடைந்தோர் விபரங்களும், எரிக்கப்பட்ட கொள்ளையடிக்கப்பட்ட வீடுகள். கடைகளின் விபரங்களும் கணக்கிடப்பட்டு மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## அண்ணன் ஏசியதால் மனமுடைந்த தங்கை தற்கொலை!

[மாவிட்டபுரம்]

சிறிய தாயாரின் வீட்டுக்குச் சென்றதற்காக அண்ணன் பேசியதால் மனமுடைந்த தங்கை நஞ்சருந்தி உயிரைப் போக்கிக்கொண்டார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்வராஜா ரோகிணி [18 வயது] என்னும் இளம் யுவதியே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு.நா.தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் காலமானவர் காங்கேசன்துறையிலுள்ள சிறியதாயாரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு வந்தபோது அவரது அண்ணன் ''ஏன் அங்கு போனுய்?'' எனக் கேட்டுப் பேசியதாகவும், அதனையடுத்து மனமுடைந்து காணப்பட்ட காலமானவர் நஞ்சருந்தியதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது. தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி சிவசோதி செல்வச்சந்திரன் நஞ்சருந்தியதால் ஏற்பட்ட மரணம் என பிரேதபரிசோதனை அறிக்கையில் தெரிவித்தார்.

இறுதியில் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மாவிட்டபுரம் கிராமசேவையாளர் திரு கனகநாயகம் விசாரணைக்கான ஏற்பாடுகளைச் செய்து சாட்சிகளை ஆஜர் செய்தார்.

## நாளைநடக்கும் மகாகும்பாபிஷேகம்

(கல்வியங்காடு)

யாழ். நீராவியடி கடையிற் சுவாமி சமாதிசிவாலய தேவஸ்தானத்தின் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நாளை திங்கள்முதல் 29ம் திகதி புதன் வரை நடைபெறும்.

நவக்கிரக ஆராதனை நாளை காலையிலும், மாலையில் யாக பூசையும் நடைபெறும்.

28ந்திகதி யாக பூசையுடன் எண்ணெய்க் காப்புச் சாத்துதலும் இடம் பெறும். 29ந் திகதி காலையில் தூபி அபிடேகமும் இதனைத்தொடர்ந்து மகாகும்பாபிடேகமும் நடைபெற்று குரு ஆசியுரை இடம்பெறும் ஆசியுரையை பிரம்மஸ்ரீ சாமிவிசுவநாதக் குருக்களும், பிரம்மஸ்ரீகிருஷ்ண சுப்பிரமணிய சாஸ்திரிகளும் நிகழ்த்துவர். வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் சிறப்புரை நிகழ்த்துவார்

கிரியைகள் யாவும் வித்தியாசாகர நியாயசிரோமணி சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் இடம்பெறும் யாழ்ப்பாணத்து பிரபலகுருக்கள் 11பேர் கும்பாபிடேகத்தை நடத்துவர்.

## இன்று

[யாழ்ப்பாணம்]

இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தின், ஆய்வரங்கு இன்று மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆய்வரங்கில், 'பிள்ளைகளின் திருமணத்தை சரியாக அறிவதெப்படி' என்ற பொருள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும், [கெ]

## தி. மு. க. ஆர்ப்பாட்டம்

(சென்னை)

''இலங்கைத் தமிழர்பிரச்னையில் இந்திய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளும் நேற்று அறைகூவல் விடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தின.

தி.மு.க. தலைமையில் எதிர்க் கட்சிகள் நடத்திய மறியற் போராட்டத்தினல் தமிழகத்தில் அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் எதுவும் இயங்கவில்லை. இந்நிறுவனங்கள் எல்லாவற்றிற்கும் நேற்று அரசாங்க விடுமுறை தினமென தமிழக அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது.

## இலங்கைக்கு 491 ஓட்டங்கள்

லண்டன், ஆக. 25

இலங்கைக்கும் இங்கிலாந்திற்குமிடையே நடைபெறும் கிரிக்கெட் டெஸ் போட்டியில் இலங்கை அணி மதிய இடைவேளைக்குச்சற்று முன்னதாக ஏழுவிக்கெட்டுகளை இழந்து 491 ஓட்டங்களுடன் தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

சித்தாத் வெத்த முனி 190 ஓட்டங்களையும் லூயிப்மெண்டிஸ் 111 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணி தனது ஆட்டத்தின்போது 1விக்கெட்டினை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்று தொடர்ந்து ஆடிக் கொண்டிருந்தது.

## யாழ்.நகரில் திடீர் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் நேற்றுக் காலை இடம்பெற்ற அசம்பாவிதத்தையடுத்து யாழ்நகரில் பெரும்பரபரப்பு ஏற்பட்ட போதும் சற்று நேரத்தில் நிலைமை' வழமைக்குத் திரும்பியது.

போக்குவரத்துச் சேவைகளும் தொடர்ந்து நடைபெறுவதாகத் தெரிவிக்ப்பட்டது. [மா]

## 19 பேர் நேற்று விடுதலை

(கொழும்பு)

''அண்மையில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு காலி ராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் 19 பேர் நேற்று விடுதலைசெய்யப்பட்டுள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் ஆத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட இந்த இளைஞர்கள் பயங்கரவாதிகளை கண்டுபிடித்துதருவதற்கு தாம் உதவுவதாக குறிப்பிட்டுள்ளார்கள். என்றும் காலி முகாமில் உணவுடன் நல்ல முறையில் தங்களைப் பராமரித்தாகவும் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்கள் இன்று தமது வீடுகளைச்சென்றடைவார்கள் என்றும் ஏனைய இளைஞர்கள் விசாரணை செய்யப்பட்டுவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் அனுமதி

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இராசதுரை என்றழைக்கப்படும் தாமோதரம்பிள்ளை (45 வயது) என்பவரே துப்பாக்கிச் சூட்டினல் ஏற்பட்ட காயங்களுடன் அனுமதிக்கப்பட்டதாகவும், இவர் ஒரு மன நோயாளியென்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் பல இடங்களிலும் நடமாடித் திரிபவரென்றும், வல்லையிலுள்ள உப்புவெளி வீதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கிலக்கானவரென்றும், ஐஸ்கிரீம் விற்பனைசெய்யும் வாஹனென்றில் எடுத்துவரப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் பிரிவினை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு வழங்கிய பிரத்தியேகப்பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளார்,

திரு. வியனகே தொடர்ந்து தமது பேட்டியில் தெரிவித்திருப்பதாவது: ''தமிழ் கொரில்லாக்கள் தென்னிந்தியாவுடன் மிகவும் நெருக்கமாக இருப்பதுடன் அங்கிருந்தும் சிறிது சிறிதாக இலங்கையினுள் ஊடுருவல்களை மேற்கொள்கின்றனர்.

இலங்கையில் இஸ்ரேலிய பாதுகாப்பு நிபுணர்கள் கடல் கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகளிலோ அல்லது ஏனைய இராணுவ நடவடிக்கைகளிலோ நேரடியாக ஈடுபடவில்லை இலங்கைக்கு இராணுவ ஆலோசனைகளை மட்டும் அவர்கள் வழங்கிவருகின்றனர்.

''இஸ்ரேலுடன் தொடர்பு கொண்டிருப்பதினல் இலங்கை அரபு நாடுகளின் ஆட்சேபனைக்குள்ளாகியுள்ளது. ஆனல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் அரபு நாடுகளுக்கும் கொழும்பில் தூதுவராலயங்கள் இருக்கின்றன. இந்நிலையில் இலங்கை இஸ்ரேலுடன் உறவு வைப்பதை ஆட்சேபிப்பதற்கு காரணம் எதுவும் காணப்படவில்லை'' என்றூர்.

இலங்கைக்கும், இஸ்ரேலுக்குமிடையே 14 வருடங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்த உறவைச் சீராக்குவதிலும் இலங்கை முயலுகிறது என்றும் திரு. வியனகே தெரிவித்தார். (கி)

## தாய்மார்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ் நகர வீதிகளில் நடத்திய ஊர்வலத்தில் திரு. சிவசிதம்பரமும் கலந்து கொண்டார் என்ற தவருன பிரசாரம் அன்னையர் முன்னணியை மிகவும் வருந்தச்செய்துள்ளது என்றும் அவர் மேலும் குறப்பிட்டார்.

ஊர்வலத்தில் பங்குகொண்ட அன்னையர்களுக்கும், பலவிதங்களில் உதவியவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

## இளைஞர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராணுவ முகாம்களுக்கு கொண்டு போகப்பட்டு இருக்கும் இடமே அறிவிக்கப்படாமலிருப்பதாகவும் கிடைத்துள்ள தகவல்களையொட்டியே பிரதமர் இந்திரா இலங்கை ஜனதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இந்த இளைஞர்களை உடனே அவர்களின் தாய்மார்களிடம் ஒப்படைக்க ஏற்பாடுசெய்யுமாறு திருமதி காந்தி தமது கடிதத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறூர்.


## மரண அறிவித்தல்

### வி. முத்துலிங்கம்

(வழக்கறிஞர், சுங்கசேகரிப்பாளர் Collector, customs)

பருத்தித்துறையைச் சேர்ந்த முத்துலிங்கம் காலமானுர். இவர் வேதநாயகியின் அன்புக்கணவரும், வைத்தியநாதன், கனகசபை, அகிலாண்டநாயகி, யசோதரா, பவானி ஆகியேரின் அன்புத்தந்தையும், நவகடாட்சம், ஸ்ரீதரன் ஆகியோரின் மாமனுரும் ரமணனின் அன்புப் பேரனும் ஆவார். அன்னரின் பூதவுடல் ஈமக்கிரிகைக்காக 27-8-84 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இல 12/5 பிரான்சிஸ் ரேட், வெள்ளவத்தை இல்லத்திலிருந்து கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 1452


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu. Telephone: 22389 — 24126.